# செந்தமிழ்ச் செல்வி

## உள்ளுறை



சிலம்பு-ருக] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௭ ஐப்பசி, (Nov.'76) [பரல்-ரு

## 'செந்தமிழ்ச் செல்வி'

### இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்



---

Acc. No. 38097.


# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு

| சிலம்பு ருக | திருவள்ளுவர் ஆண்டு உ00எ, ஐப்பசி நவம்பர் 1976 | பரல் ரு |
| --- | --- | --- |


## அடிகளார் தனித்தமிழ் இயக்க மணிவிழா

இவ் வாண்டில் மறைமலையடிகள் நூற்றாண்டு விழாவும் செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழாவும் நடைபெற இருக்கின்றன என்பது அறிவீர்கள். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கியது 1916 ஆம் ஆண்டாகும் என்பது *அவர்கள் வரலாற்றைப் படித்தவர் நன்குணர்வர். எனவே இவ் வாண்டில் தனித்தமிழ் இயக்க மணி விழாவினை மற்றும் இரண்டு விழாக்களோடு சேர்த்து முப்பெரும் விழாக்களாகக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய தனிப்பெரும் சிறப்பாகும்.

1916 ஆம் ஆண்டில் ஒருநாள் அடிகளார் தம் அருமைத் திருமகளார் திருவாட்டி நீலாம்பிகையாரோடு தோட்டத்திலே உலாவிக் கொண்டிருக்கையில் இராமலிங்க அடிகளார் பாடிய திருவருட்பாவில் ''பெற்ற தாய்தனை மக மறந்தாலும்'' என்ற பாட்டில் ''உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்'' என்ற இரண்டாவது வரியைப் பாடியதும் அடிகளார் தம் மகளாருடன் ''தேகம்'' என்ற சொல்லுக்கு ''யாக்கை'' என்ற தூய தமிழ்ச் சொல்லை அமைத்தால் நன்றாயிருக்குமல்லவா என்று சொன்னவுடன் மகளார் ஆம்! மிக நன்றாயிருக்குமென்று பெருமகிழ்வுடன் கூறவே, தனித்தமிழ் நடையில் பேசுவதும் எழுதுவதும் வழக்கில் வரவேண்டுமென்று எண்ணிய அடிகளார் அன்றே ''சுவாமி வேதாசலம்'' என்ற தமது பெயரை ''மறைமலையடிகள்''

*மறைத் திருநாவுக்கரசனார் எழுதிய மறைமலையடிகள் வரலாறு, பக்கம் 297.

என்றும், தாம் நடத்தி வந்த ''ஞான சாகரம்'' என்னும் இதழை ''அறிவுக்கடல்'' என்றும், தாம தொடங்கிய "சமரச சன்மார்க்க நிலையத்''தைப் ''பொதுநிலைக் கழகம்'' என்றும் தூய தமிழில் மாற்றி யமைத்தனர்.

தம் அருமைத் திருமகள் நீலாம்பிகை யம்மையாரோ அன்று முதல் தம் தம்பிமார்கள் ''திருஞானசம்பந்தம்'', ''மாணிக்கவாசகம்,'' "சுந்தரமூர்த்தி,'' தங்கை "திரிபுரசுந்தரி," தமக்கையின் மகன் ''நடராசன்,'' மகள் ''ஞானம்'' ஆகியோர் பெயர்களை முறையே ''அறிவுத் தொடர்பு,'' ''மணிமொழி,'' ''அழகுரு,'' ''முந்நகரழகி,'' ''அம்பலவாணன்,'' ''அறிவு'' என்று தனித்தமிழில் அழைக்கலாயினர்.

அடிகளார் அது முதல் தாம் பேசுவதிலும், எழுதுவதிலும் பிறமொழிச் சொற்களைக் கலப்பதில்லை என்று உறுதிகொண்டு தூயதமிழில் பேசியும் எழுதியும் வந்தனர். மேலும் தாம் முன்பு பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதிய நூல்களைத் திரும்ப அச்சிடுகையில் அவற்றிலுள்ள பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றுக் கேற்ற தூயதமிழ்ச் சொற்களைப் பெய்து அச்சிடு வாராயினர்.

மேலும் அடிகளார் தமது சொற்பொழிவில் மனோன்மணீய நாடகப் பேராசிரியர் இயற்றிய தமிழ்த்தாய் வணக்கத்தை இனிய குரலிற் பாடி அதிலுள்ள,

''கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாள முந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே''

என்ற பகுதியினை வலியுறுத்துவர்.

என் அருமைத் தமையனார் திருவாளர் திருவரங்கனார் அவர்கள் 1918 இல் இலங்கையிலிருந்து சென்னைக்கு வந்து அங்கே நடத்திய ''திருசங்கர் கம்பெனி'' என்னும் புத்தக வாணிப நிலையத்தைச் சென்னைப் பவழக்காரத் தெரு 2 ஆம் எண் வீட்டு முகப்பு அறையில் நடத்தி வந்தனர். அப்போது மறைமலையடிகளார் எழுதிய ''திருவாசக முதல் நான்கு அகவல் உரையை''ப் பகுதி பகுதியாக வெளியிடும் இதழுக்குச் ''செந் தமிழ்க் களஞ்சியம்'' என்னும் தூயதமிழ்ப் பெயரை இட்டனர். 1921இல் திருசங்கர் கம்பெனி பதிவு செய்யப்பட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தோடு இணைக்கப்பட்டது. திரு வாளர் திருவரங்கனார் அவர்கள் கழக அமைச்சராகவும் அவர்கள்

இளவலாகிய யான் சென்னைக் கிளைநிலைய முகவராகவும் பணியாற்றி வந்தோம். சென்னையில் 1923இல் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களை இதழாசிரியர் குழுத் தலைவராக அமர்த்திச் ''செந்தமிழ்ச் செல்வி'' என்ற பெயரில் இலக்கியத் திங்கள் ஏடு வெளியிடப்பெற்றது. அதற்கு இவ் வாண்டு பொன்விழா நடைபெற இருக்கின்றது. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கையைக் கழகம் வெளியிட்டுவரும் நூல்கள் வழியும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் இதழ் வழியும், கழகம் நடத்திய பல மாநாடுகள் வழியும், அறிக்கைகள் வழியும் பரப்பி வருவதோடு, பிறவழிகளிலும் தனித்தமிழை வளர்த்து வருவது யாவரும் அறிவர். அடிகளாரின் திருமகளார் நீலாம்பிகையார் திருமணமாவதற்கு முன்பே தூய தமிழில் கட்டுரைகள் பல எழுதித் ''தனித் தமிழ்க் கட்டுரைகள்'' என்ற பெயரில் ஒரு நூல் வெளிவரச் செய்தனர். அவர்களுக்கும் என் தமையனார் திருவாளர் திருவரங்கனாருக்கும் 1927 இல் சென்னையில் மயிலாப்பூர் திருக்கோவிலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அதன்பின் தனித்தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையம்மையார் எழுதிய பெரிய அளவிலுள்ள ''வடசொல் தமிழ் அகரவரிசை'' என்னும் நூலும் தனித்தமிழ் நடையில் எழுதிய முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர், பிளாரன்சு நைட்டிங்கேல், சோன் ஆப் ஆர்க் முதலிய பன்னிரு உரை நடை நூல்களும் வெளியிடப்பெற்றன.

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் ஒன்றைத் தொடங்கி அதன் வழி ''ஆட்சிச் சொல் அகர வரிசை'' ''பிழைநீக்கி எழுதுமுறை,'' ''வடசொல் தமிழ் அகரவரிசைச் சுருக்கம்,'' ''அழைப்பிதழ் எழுதுமுறை,'' ''மக்கட் பெயர் அகரவரிசை,'' ''இல்லப் பெயர் அகரவரிசை,'' என்னும் நூல்களை ஆயிரக்கணக்காக அச்சிட்டுத் தூயதமிழ் பரவும்பொருட்டு விற்கப்பெறுகின்றன.

தமிழக அரசு தமிழை ஆட்சி மொழியாக ஏற்றபின் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஆணையின்படி தமிழரசு அலுவலகங்களெல்லாம் கழகம் வெளியிட்டுள்ள 'பிழை நீக்கி எழுது முறை' கா. அப்பாதுரையார் 'ஆங்கிலத் தமிழ் அகர முதலி,' கீ. இராமலிங்கனார் 'ஆட்சித் துறைத்தமிழ்' ஆகிய மூன்று நூல்களையும் வரவழைத்துப் பயன்படுத்துகின்றன.

புகைவண்டி நிலையங்களின் பெயர்களை மாற்றும்படி செய்த முயற்சியில் ஒரு சில நிலையங்களே பெயர்மாற்றம் பெற்றன. அண்மையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள 'பாயின்ட் காலிமீர்', 'போர்ட்டநோவோ', 'கொல்லருன்', 'கோல்டன்ராக்',

'ட்ரங்கபார்'' என்னும் நிலையங்களின் பெயர்களை ''கோடிக் கரை'', ''பரங்கிப்பேட்டை'', ''கொள்ளிடம்'', ''பொன்மலை'', ''தரங்கம்பாடி'' என்று தமிழ் எழுத்துப் பெயர்ப்பாக ஆங்கி லத்திலும் தமிழிலும் படிப்பதற்கேற்ப மாற்றப்பெற்றன.

இன்னும் பல புகைவண்டி நிலையங்களின் பெயர்கள் மாற்றம் பெறுதல் வேண்டும். அவற்றையெல்லாம் கழகம் எழுதிவைத்திருப்பினும் அவற்றைத் திருத்துவதற்கு எடுக்கப் பெறும் முயற்சி இப்போது பயன்தராது என்று நிறுத்திவைக்கப் பெற்றிருக்கிறது.

திருக்கோயில்களிலுள்ள இறைவன், இறைவியர் பெயர் களும், விழா அறிக்கைகளிலுள்ள குறிப்புகளும், நாள்வழி பாட்டில் உள்ள நிகழ்ச்சிக் குறிப்புகளும் இன்னும் பலவும் பிற மொழிகளில் வழங்கப் பெறுகின்றன. அவற்றைத் தூய தமிழாக்குவதற்கு எடுக்கப்பெற்ற முயற்சியும் முழுதும் பயன்தர வில்லை. மேலும் ''அருச்சனை'' என்னும் மலர்தூவி வழிபடும் முறையிலும் பொருள் புரியாத பிறமொழித் தொடர்களே பயன் படுத்தப்பெறுகின்றன. அவற்றுக்காகத் தூயதமிழில் 'மலர் வழி பாட்டு வரிசை நூல்கள்' கழகம் வெளியிட்டிருப்பினும் போதிய அளவு அவை பயன்படுத்தப்படவில்லை.

சென்னை மாநகராட்சியில் குடியிருப்புக்களின் (colonies) பெயர்களும், தெருப் பெயர்களும் மாற்றப் பெறுதல் வேண்டு மென்று முன்னாள் மேயராகவிருந்த திரு சா. கணேசன் அவர்கள் என்னிடம் கூறவே யானும் ஆட்சிமொழிக்காவலர் திருவாளர் கீ. இராமலிங்கனாரும் சேர்ந்து தூய தமிழில் ஒரு பட்டி ஆயத்தம் செய்தோம். மாநகராட்சி கலைக்கப்படவே யாங்கள் செய்த முயற்சி தடைப்பட்டிருக்கின்றது.

தனித்தமிழுக்காகக் கழகம் எடுத்துக்கொண்ட முயற்சி யினால் சிலர் தங்கள் பெயர்களைத் தூயதமிழில் மாற்றிக்கொண் டனர். சிலர் தங்கள் வீடுகட்கு முன்பிருந்த பிறமொழிப் பெயர்களை நீக்கித் தூய தமிழ்ப் பெயர்களை வைத்துக்கொண் டனர். ஆகாசவாணி ''வானொலி'' என்று அழைக்கப்பெறுகிறது. சென்னை ராஜ்யம் ''தமிழ்நாடு'' என அழைக்கப்பெறுகிறது.

அரசு மனைகட்கும் 'குறளகம்,' 'எழிலகம்,' 'தென்றல்,' 'பூம் பொழில்,' 'திருவரங்கம்,' 'அன்பு,' 'காஞ்சி' போன்ற தூய தமிழ்ப் பெயர்களைத் தமிழக அரசு அமைத்துள்ளனர். அழைப்பிதழ்கள் பெரும்பாலும் தூய தமிழில் அச்சிடப்பெறு கின்றன. இங்ஙனம் சிற்சில மாற்றங்கள் இருந்தபோதிலும் மக்கள் பெயர்களில் பெரும்பான்மை மாறுதல் பெறவில்லை

என்பது மிகவும் வருந்துதற்குரியது. பள்ளிகளிலும், இசை யரங்குகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பரிசு பெறுகிற வர்களை அழைக்கும்போதும் பரிசுபெறும் மாணவ மாணவிகளை அழைக்கும்போதும் அவர்கள் பெயர்களில் நூற்றுக்குத் தொண் ணூறுவரை பிறமொழிப் பெயர்களாகவேதான் கேட்கப் பெறு கின்றன. வானொலியில் நிகழ்த்தப்பெறும் உரையாடல்களிலும், கதைச் சொற்பொழிவுகளிலும் பிறமொழிச் சொற்கள் போதிய அளவு நீக்கப்படவில்லை.

இதுகாறும் சென்னை போர்ட் செயின்ட் ஜியார்ஜ் கெசட் (Madras Fort St. George Gazette) என்ற பெயரைத் தாங்கி வந்த அரசிதழ் 15—4—1970 முதல் தமிழ்நாடு அரசிதழ் (Tamil Nadu Government Gazette) என்னும் பெயர் பெற்று வெளி வரலாயிற்று.

முதுபெரும் புலவர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தமது வரலாற்றில் தாம் ''சமசுகிருதம் படிக்கவில்லை'' என்று எழுதியுள்ளனர். அவர்கள் சங்க இலக்கியங்களில் பெரும் பாலானவற்றைச் சிறந்த முறையில் பதிப்பித்ததோடு, தூய தமிழில் பதிப்புரை எழுதியுள்ளார்கள். அப்படி இருந்தும் அவர் கட்கு வடமொழியிலுள்ள பற்று நீங்கவில்லை என்பது பிற்காலத் தில் அவர்கள் எழுதிய உரைநடை நூல்களில் பிறமொழிச் சொற் கலப்பு மிகுதியாக இருப்பதால் தெரிகிறது. மேலும் அவர்கள் அச்சிட்ட ''சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்'' என்ற நூலில் ஓர் இடத்தில் ''வடமொழிக் கலப்பால் தமிழ் கெட்டுவிட்டது என்பர் ஒரு சிலர். வடமொழிக் கலப்பால் தமிழ் மேன்மையுற்றது என்பது பெரியோர் கொள்கை'' என்று எழுதியுள்ளார்கள். அந் நூலை வாங்கிப்படித்த மறைத்திரு மறைமலையடிகளார் அவ் வரிகளில் அடிக்கோடிட்டு ஓரத்தில் குறிப்பு ஒன்றும் எழுதி யுள்ளார்கள். இதைப் பற்றிய குறிப்பு முன்பு செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு ௨௬, பக்கம் ௨௮௮ இல் வெளியிடப்பெற்றுள்ளது.

அருட்கவி சேதுராமன் அவர்களின் தெய்வீகச் செயல்பற்றி நம் செந்தமிழ்ச் செல்வியின் வாயிலாக நம் தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள். அவர்கள் எந்தக் கோவிலுக்குச் சென்றாலும் அத் தெய்வத் திருவுருவத்தின்முன் நின்றதும் மெய்மறந்து திடுமென அருட் பாடல்களைப் பண்ணுடன் பாடும் ஆற்றல் பெற்றவர். அவர்களது அருளாற்றலை முதன்முதல் யான் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் வழி அறிந்து அவர்கள்பால் மிக்க அன்பு கொண்டு ஈடுபடலானேன். அருட்கவி அவர்களை அழைத்துக்கொண்டு தமிழகத்தில் பல திருக்கோயில்கட்குச் சென்று பாடுதற்கு ஏற்பாடு செய்தேன்.

இத் தொண்டு 1962 ஆம் ஆண்டிலும் 1963 ஆம் ஆண்டு முற் பகுதியிலும் சிறப்பாக நடந்தது. அவர்கள் திருக்கோவில்களில் பாடுவதைக் கேட்பதற்குத் தமிழக அரசு அமைச்சர்களில் சிலர், நடுவண அரசு அமைச்சர்களிற் சிலர், உயர்நீதி மன்ற நடுவர் களிற் சிலர். மற்றும் உயர் அலுவலர்களிற் சிலர் அழைக்கப் பெற்றுக் கேட்டுப் பெரிதும் வியப்புற்றனர்.

அருட்கவியார் பாடும்போது அவர் தமையனர் திரு. சுப்பிர மணியன் அவர்கள் உடனிருந்து அப் பாடல்களை அவற்றிற்குரிய பாவினங்களில் உடனுக்குடன் எழுதி வருவர். அவ் வகையில் அவர் பாடிய பாடல்கள் பதினையாயிரத்திற்கு மேலிருக்கும். சில கோயில்களில் பாடப்பெற்ற பாடல்கள் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடப் பெற்றதுடன், தனி நூல்களாகவும் அச்சிடப்பெற் றுள்ளன. தணிகைமணி அவர்கள் இல்லத்திலே கோயில் கொண்டிருக்கும் தணிகை முருகன்மீது பலகாலும் அருட்கவியார் பாடிய சந்தப்பாடல்கள் பல. அவற்றிலிருந்து 233 பாடல்கள் மட்டும் தணிகைமணி அவர்கள் செலவில் ''திருத்தணி அருட் புகழ்'' என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிடப் பெற்றுள்ளது. அந்த நூலுக்கு அருளிசை சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய பதிப்புரையில் வடசொற்கள் பல காணப்பெற்றன. அம் மெய்ப்பு எனது பார்வைக்கு வந்ததும் யான் ''சிரஞ்சீவி'' என்ற சொல் லுக்கு ''நீடுவாழ்'' என்றும் ''திருத்தலங்கள்'' என்ற சொல் லுக்குத் ''திருக்கோயில்கள்'' என்றும் ''தரிசித்து'' என்ற சொல்லுக்கு ''வழிபட்டு'' என்றும், ''அதிசயித்தான்'' என்ற சொல்லுக்கு ''வியந்தான்'' என்றும், ''பிரசுரிக்கப்படுகிறது'' என்பதற்கு ''வெளியிடப்படுகிறது என்றும் இவைபோன்ற சில வடசொற்களுக்குத் தூய தமிழ்ச்சொற்களை அமைத்தும் அனுப் பினேன். திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு அத் திருத்தங்கள் பிடிக்கவில்லை என்றும் இரண்டு மூன்று திருத்தங்களை மட்டும் உங்கள் பொருட்டு அவர் ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறார் என்றும் தணிகைமணி அவர்கள் துணைவியார் அருளரசி சிவா அம்மையார் சொல்லவே அந்தப்படி பதிப்புரை அந்த நூலுக்கு அச்சிடப் பெற்றது.

அருட்கவி சேதுராமன் அவர்கள் 7-7-1971 இல் நீலகிரி கல்லெட்டி யிலிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதினர்கள். அக் கடிதத் தலைப்பில்.

உ

ஸாதுராம் கல்லட்டி

ஸ்ரீவைஷ்ணவி ஸ்மரணம் (தயவு செய்து தவருது பதில் வரைக.) அக் கடிதத்தில் ஒருபகுதி

சென்ற 1-7-71 அன்று ஸ்ரீலஸ்ரீ ஸாதுபார்த்தஸாரதி ஸ்வாமிகள், ஸ்ரீவைஷ்ணவி ஆலய அன்பர் ஸ்ரீதேவராஜ், ஸ்ரீமான் ஸௌந்தரம் ஐயரவர்கள் இவர்களுடன் திருவெண்ணெய் நல்லூர் திருவருட்டுறைச் சிவாலயத்திற்கு தர்சநத்திற்குச் சென்றிருந்தேன். சுந்தர மூர்த்தி நாயனார் என அச்சந்நிதி வாயிலில் எழுதி இருக்கக் கண்டு 'ஸரிதான்' அவரைத் தடுத்தாட் கொண்ட சந்நிதி யாயிற்றே என்று எண்ணினேன். ஆனால் உடனே உட்புகுந்து பார்த்ததில் உள்ளிருந்த மூர்த்தி சுந்தரரல்ல. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் கற்சிலை. உள்ளே சம்பந்தரை வைத்து வெளியே சுந்தரர் எனத் தவறாக எழுதிவைத்திருக் கிறார்கள். சம்பந்தர் பாடல் பெற்றதல மன்று அது. மேலும் சுந்தரர் கற்சிலையும் கோயிலுள் எங்கும் காண்பரிது. உத்ஸவ மூர்த்தி—சுந்தரர், பரவை சங்கிலி இருவருடன் திகழ்கிறார். கோயில் அர்ச்சகரை விசாரித்ததில் சுந்தரர் சிலை கிடையாது. அது சம்பந்தர் சிலைதான். ஆனால் அதைத்தான் வெகுநாளாக வைத்திருக்கிறார்கள் என்றார். தாங்கள் முயன்றால் தயங்காமல் இக் காரியம் நிறைவேறச் சிவனருள் கைகூடும் என்பது என் பரிபூரண நம்பிக்கை.

(ஒப்பம்) ஸாதுராம்.

அதற்கு நான் எழுதிய கடிதம்

9-7-71

திருவருள் நிரம்பிய சாதுராம் அடிகளார்க்கு,

வணக்கம். அடிகள் வரைந்த 7-7-71 அன்புக் கடிதம் பெற்றேன். நீண்ட காலத்துக்குப் பின் தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றமை குறித்து மட்டசிற மகிழ்ச்சியடைகின்றேன்.

திருவெண்ணெய் நல்லூர்த்திருக்கோயிலில் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்படிமம் அமர்ந்திருக்க வேண்டிய இடத்தில் திருஞானசம்பந்தர் திருப்படிமம் இருப்பது வியப்பையும் வருத்தத்தையும் தருகின்றது. எவ் வழியில் அம் முறைகேட்டை நீக்க முடியும் என்பதைச் சிந்தித்து உரிய ஏற்பாடுகளைத் திருவருள் துணைகொண்டு செய்வேன்.........

அடிகள் எழுதும் தமிழில் அழகு தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்தினால் கண்ணுக்கும் மனத்திற்கும் இனிமையும் மகிழ்ச்சியும் தரும் என்பதைத் தெரிவிக்கும் கடப்பாடுபற்றி எழுதுகின்றேன்.

(ஒப்பம்) வ. சுப்பையா

மேலே கண்ட நான் எழுதிய கடிதத்திற்கு 12—7—71இல் அருட்டிரு சாதுராம் ஆங்கிலத்தில் எழுதிய மறுமொழி அஞ்சலட்டை வருமாறு.

உ

Sri Vaishnavi krupa

Sami Sadhuram. Sri Vaisnavi Estate
Om Siddhasram.

Dear Mr. Pillai, Devi skrupa.

.............................................................................

Arul Isai Sri S. V. Subramniam of Mannady P.O. very near to your place. You can as well contact him instead of asking me for the same. *Writing pure or chaste Tamil or in manipravala style is one's own taste & choice. Hence no compulsion please. With love.*

yours.

Sadhuram.

அவர்கள் பாடிய பாட்டுக்களில் ஒரு பாட்டில் என் பெயரைக் கூட "ஸுப்பையா" என்றே எழுதியுள்ளனர். அவர்கள் தம் பெயரைச் சேதுராமன் என்றும் தம் அண்ணன் பெயரை சுப்பிர மணியன் என்றும் முன்பு எழுதி வந்தவர்கள், பின்னர் "ஸேதுராமன்" ஸாதுராம் என்றும் தம் அண்ணன் பெயரை ஸுப்ரமணியன் என்றும் எழுதுவாராயினர்.

அப்படி எழுதிவருவதைக் குறித்தே யான் 9-7-71 இல் எழுதிய கடிதத்திற்கு அவர்கள் ஆங்கிலத்தில், தமிழைத் தூய்மையாகவோ, கலப்பில்லாமலோ அல்லது மணிப்பிரவாள நடையிலோ எழுதுவது அவரவரின் சொந்த விருப்பத்திற்குரிய தாகும் என்றும் அதனுல் அன்பு கூர்ந்து வற்புறுத்த வேண்டா மென்றும் எழுதி உள்ளார்கள்.

அதைக் கண்டதும் தாகூர் சட்ட விரிவுரையாளர் பேரா சிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒருமுறை தெய்வீக ஆற்றல் பெற்ற ஒரு வகுப்பினர் கூடச் சங்கத் தமிழை நன்கு கற்ற போதிலும் வடசொற்களையும் வடஎழுத்துக்களையும் தாம் எழுதும் நூல்களில் பயன்படுத்துகின்றனரே என்று நான்

கேட்டபோது ''அருள்நிலை வேறு'', ''தந்நிலை வேறு'' என்றும் அருள் நிலையில் கலப்பிருக்காதென்றும், தந்நிலையில் குலச்சார்பும், சூழ்நிலைச் சார்பும் ஏற்பட்டுக் கலப்பு ஏற்படுமென்றும் கூறினார்கள். அவர்கள் கூறியது நினைவுக்கு வரவே அருட்கவி சேதுராமன் அவர்கள் எழுதியது பற்றி அமைதியுற்றேன். அவருடைய தெய்வீக ஆற்றலுக்கு எப்போதும் யான் அளவிலா அன்பு பூண்டுள்ளேன். யான் அவர்கள்பால் அளவு கடந்த அன்பு கொண்டிருப்பது உள்ளபடி அவர்களும் நன்கு அறிவார்களாதலால் என்பால் அவர்கள் கொண்ட அன்பும் ஒரு சிறிதும் மாறாது என்பதும் அறிவேன். நடந்த செய்தியை இங்கே குறிப்பிடுவது குற்றமாகாதன்றோ!

இனி மறைமலையடிகளார் தொடங்கிய தனித்தமிழ் இயக்கத்துக்குத் தமிழ் ஆசிரியர்களும், பேராசிரியர்களும், அறிஞர்களும், அன்பர்களும் அடிகளார் நூற்றாண்டு விழாவிலே உள்ளன்போடு செய்ய வேண்டிய பணிகளைக் கீழே விவரிக்கின்றேன்.

''தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தில் உள்ளவர்கட்கோ, இனிப் பிறக்கும் குழந்தைகட்கோ தூய தமிழ்ப்பெயர் சூட்டுதல் வேண்டும். அதேபோல் தங்கள் சுற்றத்தார்கள் இல்லங்களிலும், நண்பர்கள் இல்லங்களிலும் பிறக்கும் குழந்தைகட்குத் தூய தமிழ்ப்பெயர் இடுமாறு வற்புறுத்தல்வேண்டும்.

தாங்கள் குடியிருக்கும் வீடு தங்கட்குச் சொந்தமாயிருப்பினும், குடிக்கூலி கொடுத்து இருப்பினும், அவ் வீட்டு முகப்பில் தமிழ்ப் பெயர் கொண்ட பலகை, அல்லது தகடு ஒன்று பொருத்துதல் வேண்டும்.

கழகம் வெளியிட்டிருக்கும் ''வடசொல் தமிழ் அகரவரிசை'' நூலையும் ''தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு'' நூலையும் கட்டாயம் வாங்கி வைத்துப் பிள்ளைகளைப் படிக்கச் செய்தல் வேண்டும்.

திருக்கோயில்களுக்குச் சென்றால் கழகம் வெளியிட்டிருக்கும் 'மலர் வழிபாட்டு நூல்களைக்' கொண்டு மலர் தூவச் செய்து வழிபாடு ஆற்றுதல் வேண்டும்.

தங்கள் ஊரிலுள்ள தெருக்களுக்கோ, குடியிருப்பிற்கோ தூய தமிழ்ப்பெயர்களை அமைப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

பேச்சு வழக்கில் மிகுதியாக வழங்கப்பெறும் பிற மொழிச் சொற்களையும் அவற்றிற்கு நேரான தூயதமிழ்ச் சொற்களையும் சிறு சிறு துண்டுத்தாள்களில் எழுதியோ அச்சிட்டோ நண்பர்

கட்கு வழங்கித் தூய சொற்களில் எழுதவும் பேசவும் செய்தல் வேண்டும்.

இல்லத்தில் நடக்கும் சடங்குகளைத் தமிழிலேயே தெய்வத் திருப்பாடல்களை ஓதி நடத்துதல் வேண்டும்.

அங்கங்கே உள்ள கழகங்களிலோ, அவைகளிலோ, மன்றங் களிலோ பிறசொற்களைக் கலந்து பேசக்கூடாதென்ற ஒரு திட்டத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். அப்படிப் பிற சொல் கலந்து பேசுபவரிடம் ஒரு சொல்லுக்கு 3 காசு தண்டம் என்ற விதி ஒன்று அமைக்கலாம். அந்த முறையை சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் கோவையில் கையாண்டதாகக் கேள்வி.

தம் உறவினர் வீட்டிற்கோ நண்பர்கள் வீட்டிற்கோ அழைப்பிதழ்கள் எழுத வேண்டுமெனின் நாமே வலியச் சென்று தூயதமிழில் எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

வணிக நிலையங்கள், தொழில் நிலையங்கள் பெயர்களைத் தூய தமிழில் அமைப்பதற்குத் தம்மாலான உதவிகளைச் செய்தல் வேண்டும். தமிழ்ப்பெயர் மேலும் ஆங்கிலப் பெயர் அதன் கீழுமாக இருத்தல் வேண்டும்.

புதிய புதிய பொருள்களோ, கருவிகளோ, பண்டங்களோ, கடைத் தெருவிற்கோ, தொழிலகத்திற்கோ வரும்போது நாம் அவற்றிற்கேற்ற தூய தமிழ்ப் பெயர்களை அமைத்தல் வேண்டும்.

அழைப்பிதழ்களில் ஆங்கிலமும் தமிழும் அச்சிடும் பழக்கம் நீங்க வேண்டும். தமிழர்கள் அச்சிடும் அச்சுத்தாள்களில் தமிழ் மட்டும் இருந்தால் போதும். தம் பெயரையோ தம் தந்தையார் பெயரையோ, தம் மகனார் அல்லது மகளார் பெய ரையோ எழுதும்போது முதல் எழுத்து தமிழ்ப் பெயரின் முதல் எழுத்தாகவே இருத்தல் வேண்டும். சிவமணி மகன் வைரமுத்து என்பதை எஸ். வைரமுத்து என்று போடுவதைவிட்டு சி. வைர முத்து என்றுதான் எழுதுதல் வேண்டும். இதனைப் பெரும் பான்மையோர் கடைப்பிடிக்காதது மிகவும் வருந்துதற்குரியது. இப்படி 'S' என்று போடுவதால் 'ச' கரத்தை முதலாகக் கொண்ட எந்த எழுத்தாகவும் இருக்கலாமல்லவா ?

அருள்நிறை வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய பிரதாப முதலியார் சரித்திரம் நீதிகள் நிறைந்த புதினம் ஆதலால் அதனைக் கழகம் வெளியிட விரும்பியது. அதன்கண்

பிறமொழிச் சொற்கள் நிரம்ப இருந்தமையால் படிப்பவர்கட்குச் சலிப்பு ஏற்படுமென்று கருதிப் பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து கதைச் சுவை கெடாதவாறு கழகம் பதித்து வெளியிட்டது. அதைப் பற்றித் தமிழ்ப் புலவர்களில் ஒரு சிலர் குறை கூறினர். வேதநாயகம் பிள்ளை உயிரோடிருப்பின் கழகம் செய்வதை நன்கு வரவேற்று மகிழ்வர் என்பதற்குப் பின்பு நடந்த அடியிற் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சியொன்றினைச் செல்வியில் எழுதி அமைதியுற்றேன்.

வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பெரும் புலமை மிக்க பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் 1942இல் தாம் சமய மாநாடுகளிலும் தமிழ் மாநாடுகளிலும் ஆற்றிய தலைமையுரைகளையெல்லாம் கொடுத்துத் தனிநூலாக வெளியிடுமாறு என்னிடந் தந்தனர். அப்போது திரு இளவழகனாரவர்கள் கழகப் புலவராக இருந்தனர். யான் மதிப்புமிக்க பண்டிதமணியவர்களிடம், ''ஐயா, உங்கள் தலைமையுரைகளில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்திருக்கின்றனவே. அவற்றை யான் எப்படி ஏற்று அச்சிட முடியும்? அதற்கு எனது மனம் இடங் கொடுக்காதே'' என்று கூறினேன்.

அவற்றிலுள்ள பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து அச்சிடுவது தமக்கு முழு விருப்பமே என்றும் கடைசி மெய்ப்பினை மட்டும் தமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்றும் சொன்னார்கள். அவர்கள் விரும்பியபடி அவற்றை 'உரை நடைக் கோவை' என்ற தலைப்பில் இரண்டு பகுதிகளாக அச்சிட்டுக் கொடுத்து அவர்களுடைய பாராட்டினை யானும் இளவழகனாரவர்களும் பெற்றோம்.

இப்போது பல துறை அறிவுகளைத் தந்துவரும் ஆங்கிலத்தை அகற்றக் கூடாதென்றும், சமசுகிருதத்தைக் கட்டாயப் பாடமாக்குதல் வேண்டும் என்றும், உருது மொழி நன்கு வளர்க்கப் பெறுதல் வேண்டு மென்றும் இதழ்களில் காணப் பெறுவது சிந்தித்தற் குரியது.

அடிகளார் நூற்றாண்டு விழா, செந்தமிழ்ச் செல்வி பொன் விழா, தனித்தமிழ் இயக்க மணிவிழா ஆகிய முப்பெரு விழாக்களில் மேலே கூறியவற்றை தமிழறிஞர்கள் உணர்ந்து தூய தமிழ் பரவத் தங்களாலான தொண்டு செய்வோம் என உறுதி எடுத்துக் கொள்ளும்படி பணிவன்போடு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

வ. சு.

# சிவஞானபோத ஆராய்ச்சி

[தவத்திரு அழகரடிகள்]

(சிலம்பு ௩௧, பரல் ௨, பக்கம் ௬௬இன் தொடர்ச்சி)

இதற்கும், ஆசிரியர் ஓர் எடுத்துக் காட்டுக் கூறுகிறார். 'குளவி ஒரு புழுவை முதலில் எடுத்துக் கொள்ளுகிறது; தன்னைப் போல் குளவியாக வேண்டும் என்று விரும்புகிறது; அந்தப் புழு, நாளடைவில், குளவியின் விருப்பப்படி குளவி உருவாக மாறுகிறது. குளவி சிற்றறிவு உடைமையால் அது தன் விருப்பப்படி செய்துகொள்ள முடியாது; பேரறிவு வாய்ந்த இறையருள், அப் புழுவுக்குக் குளவி வடிவம் உண்டாக, 'நிமித்த காரணமாய்' இருந்து உதவியது.

இந்த எடுத்துக்காட்டில், 'புழு' என்பது மூலப் பொருள்; 'குளவி' என்பது ஆன்மா; அது விரும்பிய வடிவம் என்பது, வினையின் விளைவு; இவற்றை யெல்லாம் கூட்டிக் குளவி வடிவம் உண்டாக உதவியது, 'நிமித்த காரண'மாகிய கடவுள்!

எண்ணிப் பார்த்தால், புழுவுக்குக் குளவி வடிவம் நேர்ந்ததுக்குச் சில காரணங்கள் தோற்றும். முதற் காரணம் புழு; துணைக் காரணம் குளவியின் விருப்பமும் திருவருளும்; 'நிமித்த காரணம்' முதற் கடவுள்!

இங்ஙனம் அவரவர் வினையால் உலகமும் உடம்பும் பலவாறுய்த் தோன்றுவதற்கு மாயை முதற் காரணமாக இருக்கிறது; இறைவன் நிமித்த காரணமாக இருக்கிறான்; அவன் ஆற்றலாகிய அருளும் அவரவர் வினையும் துணைக் காரணங்களாக இருக்கின்றன.

இவ்வாறு சொல்லும்போது, மற்றோர் ஐயமும் தோன்றும். முதற் கடவுள் இங்ஙனமெல்லாம் மாயையிலும், அதன் காரியங்களிலும், உயிர்களின் வினைகளிலும், கருத்து வைத்து, உலகத்தையும் உடம்புகளையும் தோற்றுவிக்கும்போது, அக் கடவுளுக்கு மலக்கட்டு உண்டாகாதா? தன் உரிமையாய் இறைவன் இருக்க முடியுமா? திரிவுபடானா? என்று சிந்தனை பிறக்கும். கட்டு உண்டாகாது என்று மெய்கண்டார் கூறுகிறார்.

அதற்கும் அவர் எடுத்துக்காட்டுகள் காட்டுவார்.

"நோக்காது நோக்கி நொடித்தன்றே, காலத்தின்,
தாக்காது நின்று, உளத்திற் கண்டு, இறைவன்—ஆக்காதே,
கண்ட நனவு உணர்விற், கண்ட கனவு உணரக்
கண்டவனின் இற்று; இன்றும் கட்டு."

இச் செய்யுளில் மெய்கண்டார் இரண்டு எடுத்துக் காட்டுகள் கூறுகிறார். ஒன்று, காலம்; மற்றொன்று கனு.

முன்பு செய்த செயல்களும், இப்போது செய்யும் செயல் களும், இனிமேல் செய்யப்போகும் செயல்களும் முறையே இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்னும் மூவகைக் காலங்களைச் சேர்ந்தவை; இருந்தாலும், காலத்துக்கும் இச் செயல்களுக்கும் ஒரு கட்டும் இல்லை. 'கால தத்துவம்' ஒரு தொடக்கும் இல்லாமல், உரிமையாகவே இருக்கிறது! அதைப் போல், முதற் கடவுளும் ஒரு தொடக்குங் கொள்ளாமல், உலகத்தைத் தோற்றி, இருக்க வைத்து, அழிக்கிறான்.

கடவுளுக்கு உடம்பில்லை யாதலால், அவர் பொறிகள் முதலிய கருவிகளால் செய்வதென்பதும் இல்லை. கருத்தளவாய் (உள்ளத்திற் கண்டு, 'சங்கற்பத்'தால்) செய்து முடித்து விடு கிறார். அதனால், 'படைக்காமற் படைத்து, நோக்காமல் நோக்கி (காத்து), நொடிக்காமல் நொடித்து (அழித்து) விடு கிறார்', என்று ஆசிரியர் கூறியிருக்கிறார். 'நோக்காமல்—கரணங்களால் காக்காமல், நோக்கி—உள்ளத்தால் (சங்கற்பத் தால்) காத்து' என்பது பொருள். அப்படியே படைப்பும் அழிப்பும்!

கரணங்களால் செய்யாமையால், படைக்காமல், நோக்கா மல், நொடிக்காமல் செய்வதாக இறைவன் இப்படிக் கூறப்படு கிறான். இப்படிப்பட்டவனுக்குக் காலத்தைப் போல் கட்டு உண்டாவதில்லை என்றது பொருத்தமே!

இரண்டாவது, கனு; கனவுகள் பலவகையாகக் காணப்படு கின்றன; விழித்த பின் அக் கனவுகளால், அவற்றைக் கண்ட வன் உணர்வு, தொடக்குறுவதில்லை.

இவற்றைப் போல் உலகத்தைப் படைத்துக் காத்து அழிப் பதனால் கடவுளுக்கும் கட்டு இன்றாம்; அப் பெருமானது உரிமை யியல்புக்கு இவற்றாலெல்லாம் ஒரு தொடக்கும் இல்லை. இவ்வாறு இச் செய்யுள் கூறியது.

### 3. அந்தம் ஆதி :

'அந்தமே ஆதி' என்பது இதன் பொருள். அந்தம் என்பது அந்தத்தைச் செய்யும் கடவுளைக் குறித்தது. அந்தக்

கடவுளே முதற் கடவுள் என்பதற்காக 'ஆதி' என்பது வந்தது.

இதனுல், இந்த மூன்ரும் பிரிவுக் கருத்தை மெய்கண்டார் சொல்லும்போது, "சங்காரமே முதல்" என்ருர். நூற்பாவின் கருத்தை முதன் முதலில் உரைக்கும்போதும், 'சங்கார காரணனுயுள்ள முதலேயே முதலாக உடைத்து இவ் வுலகம்' என்று கருத்துரைத்தார். இதனுல் நூற்பாவின் மூன்ரும் பிரிவு தான், நூற்பாக்கருத்தையே நன்கு உணர்த்துகின்றது என்பது தெளியப்படும்.

இதற்கு மற்ருெரு காரணமும் உள்ளது. நூற்பாவில் இரண்டு பிரிவுகளும் கடவுள் உண்மையைப் பொதுவாகக் கூறின. அதாவது, 'கடவுள்' என்னும் பொதுப் பெயரால் கூறின. இரண்டாம் பிரிவு, அழித்தற் கடவுளைக் குறித்தாலும் அதுதான் முதற் கடவுள் என்று கூறவில்லை. இந்த மூன்ரும் பிரிவில் மட்டும், கடவுள் 'அழித்தற் கடவுளே' என்று சிறப்பு வகையால் நிறுவுகின்றது.

'ஒடுங்கி' என்பது பொதுவாக ஒடுக்குங் கடவுளைக் குறிக்கும்; 'முடிந்த ஒடுக்குங் கடவுளே' என்று எப்படிச் சொல்லுவது? இடைப்பட்ட ஒடுக்குங் கடவுளரைக்கூட (தேவர்களை) அது குறிக்கலாம்; அந்தமே என்பதுதான், கடைசி முழு ஒடுக்கத்தையுங் (சர்வ சங்காரம்) குறிப்பது; ஏகாரம் அச் சிறப்பைத் தெளிவாக்குகிறது; 'அந்தமே ஆதி' என்று 'ஆதி'யுங் குறிப்பிடப் படுவதனுல், 'அந்தம்' என்பது, 'முழு ஒடுக்கத்'தைச் செய்வாரைக் குறிக்கும் வகை தெரிகிறது; முழு ஒடுக்கத் தலைவராகிய முதற் கடவுளைக் குறித்த தென்றபடி.

உலகத்துக்கு அந்தத்தைச் செய்யும் அழித்தற் கடவுளே, படைப்புக்கும், காப்புக்கும் காரணராவார். அவர் ஏவலாலேயே படைப்புக் கடவுள் காப்புக் கடவுள் முதலானவர்கள் தத்தம் பணிகளைச் செய்கின்றனர். அதனுல், அந்தத்தைச் செய்யும் கடவுளே, அவரனைவர்க்கும் முதற் கடவுளாகின்ருர்.

'ஆதி' என்றது, 'முதற் கடவுள், தலைமையான கடவுள்' என்னும் பொருட்டு.

அழித்தலைச் செய்யும் ஆற்றல் வாய்ந்த முதற் கடவுளின் ஏவலால் மற்றவர்களெல்லாம் இயங்குவதனுல், அவர்கள் எல்லாரும் உயிரினங்களைச் சேர்ந்தவர்களாகின்றனர். கடவுள் என்பவர் ஒருவரே! கடவுள் ஒருவர் என்ருல், மற்றவர்கள் உயிர்களாகத்தான் இருக்க வேண்டும்; உரிமை யியல்பும் அற்றவர்களாவார்கள். முதற் கடவுள் ஒருவரே தனி உரிமை உடையவர்.

இதற்குக் காரணம், கடவுள், தமக்குவமை யில்லாதவர்; முழுப் பேரறிவுடையர்; இயல்பாகவே கட்டற்றவர்! உயிர்க ளெல்லாம் சுட்டுணர்வு என்னும் சிற்றறிவுடையவர்களாய் இருக் கின்றனர். உயிரினங்களில் தேவரும் ஒரு வகையார்.

"கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!"

என்பார் மாணிக்கவாசகர்; தேவரும் பிறப் பிறப்புகளுக்குட்பட்ட உயிரினங்களே என்பது இதனுல் தெரிகிறது.

பேரறிவுடைய முதற் கடவுள்போல் சிற்றறிவும் மலக் கட்டும் உடைய தேவர்கள் உரிமையாய் இருக்க முடியாது. ஆகவே ஆசிரியர், 'சுட்டுணர்வு இன்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது, இவர்கள் எல்லாம், சுதந்தரம் இன்றி நிற்றலின்' என்று ஒரு காரணமும் கூறினர்.

'தேர் போன்ற ஒரு பெரிய தொழிலைச் செய்வதற்குச், செய்வோர் பலர் வேண்டும்; ஒருவரால் இயலாது; அதுபோல, வியப்பு மிகுந்த இப் பெரிய உலகப் பணிக்குக், கடவுளர், பலர் வேண்டும். ஒரே கடவுளால் இயலாது' என்று சிலர் சிந்தனை கொள்வர். 'அநேக ஈசுர வாதிகள்' என்று அவர்களுக்குப் பெயர்.

இருந்தாலும், ஒருவர் ஏவல் வழியே அப் பலரும் வேலை செய்வர். தலைவராயிருப்பவர் ஒருவரே! ஆதலால், முதற் கடவுளின் ஏவல் வழியே, தேவர் பலர் உலகத்தைத் தோற்று விப்பதும் காப்பதுமாய் இருக்கிருர்கள்.

மற்றெரு சிந்தனையும் இங்கே தோன்றக் கூடும். அப்படியே அந்தத்தைச் செய்பவர் முதற் கடவுளாகவும் பலர்க் குத் தலைவராகவும் இருந்தாலும், உயிரினங்க ளெல்லாம் உரிமை யில்லாமல் இருந்தாலும், வீடுபேறு அடையும்போதா வது, அவை, முதற் கடவுளைப் போலவே சமமாகிச் சிவசமமாய், உரிமை யுள்ளவர்களாய், இருப்பார்களே என்பது; இப்படிச் சொல்லுகிறவர்கள் 'சிவ சமவாதிகள்' முதலியோர்.

இதற்காக, மெய்கண்டதேவர், 'வீடுபேற்றிலும் உயிர்கள் சிவத்தோடு சமமாவதில்லை; முன்னுல் மலக்கட்டு உடைய உயிர் களாய் இருந்தவை, பின்பு இறைவனருளால் மலக்கட்டு நீங்கி வீடுபெற்றன; மற்றப்படி, உயிரின் இயல்பு முன்பும் பின்பும் ஒன்றுதான். வீடுபேற்றிலும் (அங்கும்) அடிமையாகவே இருப்பார்கள்' என்கிருர்; "என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ" என்பது தாயுமானுர் சொல்;

உயிர்கள் வீடுபேற்றில் அடிமையாவதிலும் பலவகை யுண்டு என்பது மெய்கண்டார் கருத்து. அவ் வகைகள் சில, இங்கே காணலாம்.

'உலகத்தில் ஞாயிறு இருளை நீக்குகிறது; பொருள்களைக் கண்கள் காண்கின்றன. ஆயினும், ஞாயிறும் உடனிருந்து துணை புரியவேண்டி யிருக்கிறது. கண்ணுக்கும் ஒளி கொடுத்துப், பொருள்களையும் விளக்கி, இருளையும் நீக்கிக்கொண்டு, சூரியன் இருந்தால் மட்டுந்தான், கண்கள் பார்க்க முடியும். அதுபோல, வீடுபேற்றுக் காலத்திலும், ஆண்டவன், உயிரின் அறிவிற்குத் தொடர்ந்து ஒளி கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டியுள்ளது. கண்கள் சூரியனாவதில்லை, அதுபோல, உயிர்கள் அங்கும் சிவமாதல் இல்லை. கதிரொளியும் கண்ணொளியும் கலந்திருப்பது போலச் சிவவொளியும் ஆன்மவொளியும் இரண்டறக் கலந்திருக்கின்றன.

2. மேலும், உயிர்களின் இயல்பு சார்ந்ததன் வண்ணமாய் இருப்பது; எதைச் சார்கிறதோ அதன் இயல்பைப் பெற்று விடும். முத்தியில் மலங்களின் சார்பை நீக்கி, இறைவனைச் சார்ந்திருக்கிறது; அதனால், இறைவன் இயல்புகளை உயிர்கள் அடைகின்றன: தனித்திருந்தால் அப்படி அடைய முடியாது. இறைவன் தனித்திருந்தாலும் பேரியல்புகளை உடையவன்; அவன் தன்னியல்பில் இருக்கமுடியும்; உயிர்கள் எதையாவது சார்ந்துதான் இருக்க முடியும்; வீடுபேற்றிலும் அப்படித்தான்.

3. அன்றியும், இறைவன் உலகத்தைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருளுகின்ற ஐந்தொழிலும் செய்கிறவன். உயிரினங்கள் அப்படி அல்ல; இறைவன் செய்யும் ஐந்தொழில்களுக்கு உதவியாய் இருப்பதற்குக் கூடப் பதமுத்தியில் உள்ள உயிரினங்களே தொடர்புடையன. சிவமுத்தியில் உள்ள உயிரினங்களுக்கு அத் தொடர்பே இல்லை. அவை சிவப்பேரின்பம் ஒன்றை நுகர்வதற்கு மட்டும் உரியன. துய்ப்பின் திறம் ஒன்றுதான் அந்நிலையில் உயிர்களினுடையது; துய்ப்பை வழங்குந் திறம் இறைவனுடையது.

4. இன்னும் ஒன்று; உயிர்களின் உணர்வு வீடுபேற்றில் இறைவன் உணர்வாகவே ஆகிவிடாது; இறையுணர்வு மிக நுட்பமானது; மல நீங்கிய காலத்தும் உயிருணர்வு அவ்வளவு நுட்பமானதன்று; முதல்வன் உணர்வு பரவலுடையது (வியாபகம்); உயிரின் உணர்வு அதனுள் அடங்கி ஒவ்வொரு வகையான அளவில் நிற்பது (வியாப்பியம்).

இவ் வேறுபாடுகளினுல் 'உயிரினங்கள் பல வகையாலும் வீடுபேற்றில் உரிமையின்றி யிருப்பதே இயல்பு என்று முடிவு செய்ய வேண்டி யிருக்கிறது' என்று மெய்கண்டார் தெரிவிக்கிருர்.

இந்த மூன்ருவது பிரிவுக்கு எடுத்துக்காட்டாக ஒரு செய்யுள் வருகின்றது.

"ஒன்றலா வொன்ருல் உளதாகி நின்றவாறு,
ஒன்றலா வொன்றில் அவை ஈருதல்,—ஒன்றலா
ஈறே முதல்; அதனின் ஈறலா வொன்று, பல
வாறே தொழும்பாகும் அங்கு."

இதில், 'ஒன்றலா ஒன்று' என்பது அடுத்தடுத்து வருகிறது; இப்படி அடுக்காய் வருவதற்கு நோக்கம் உண்டு. எல்லாம், நமக்கு உறுதியும் தெளிவும் உண்டாகத்தான்; 'உலகப் பொருள்களுள் ஒன்றல்லாதது கடவுள்' என்று குறிக்கப்படுகிருர்; கடவுள், அப்படிப்பட்டவர்.

'ஈருதல்' என்பதை 'ஈருதலால்' என்று விரித்துக் கொள்ள வேண்டும். 'அந்தம் அடைதலால்' என்பது கருத்து; 'அந்தமே ஆதி' என்பதை 'ஈறே முதல்' என்ருர். 'அந்தம்' என்பதற்கு 'ஈறு' என்றும் 'ஆதி' என்பதற்கு 'முதல்' என்றும், ஆசிரியர் மெய்கண்ட தேவரே, இன்னதற்கு இன்னது பொருள் என்று விளக்கியது தெரிகிறது. இங்கே ஏகாரம் விரித்து அவரே கூறியிருத்தலும் நினைவு கூர்க. ஈறு அலா ஒன்று—இறுதி செய்யுங் கடவுள் அல்லாத ஒன்று; அது, உயிர்; 'ஈறு அலா ஒன்று' என்பதில், ஈறு என்பது, இறுதி செய்யுங் கடவுள் என்பதும், நூற்பாவில் 'அந்தம்' என்று வருவதற்கும் அந்தத்தைச் செய்யுங் கடவுள் என்று உரை கொள்ள வேண்டும் என்பதும், உயிர் என்பது கடவுள் அல்லாதது என்பதும், ஆசிரியர் கருத்தாதல் விளக்கமாகின்றது. அங்கு—அங்கும்; வீடுபேற்றிலும்.

'கடவுளால் உலகம் மீள உளதாகி நிற்கிறது; நின்றவாறு, அவ்வுலகத் தொகுதி, இறுதியும் அடைகிறது; அடைதலால்; அங்ஙனம் ஈறு செய்கின்ற கடவுளே முதற் கடவுளாவார், அதைப்போல இறுதி செய்யும் முதற் கடவுள் அல்லாத உயிர்; வீடுபேற்றிலும் பலவகையாக அடிமையாய் இருக்கும்; கடவுளோடு அங்கும் சமமாவதில்லை' என்று கருத்து வருகிறது, ஆதலால், அந்தத்தைச் செய்யும் கடவுளே (சிவமே) படைப்பு முதலியன செய்யும் முதற்கடவுள் என்பது கருத்தாயிற்று!

முதல் நூற்பாவில் உள்ள கருத்துக்களுக்கு ஆசிரியர் மெய்கண்டார் கூறிய விளக்கங்களைப் பார்த்தோம். அவ் விளக்கங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்றும் இனி நாம் தெளிந்துகொள்ள வேண்டும்.

தெளிய வேண்டிய கருத்துக்களின்மேல் நூற்பாக்கள் ஒவ்வொன்றையும் ஆசிரியர் சில பிரிவுகளாகப் பிரித்து, ‘வார்த்திகப் பொழிப்புரை’யால் விளக்கங்கள் செய்கிறார். இப் பொழிப்புரை, நூற்பாவின் உள்ளுறைக் கருத்துக்களைப் பிரிவு பிரிவாகப் பிரித்து, அவரவர் சிந்தனை வினாக்களுக்கு ஏற்ற வகையில் விடைகள் தருகின்றது. புலப்படும் முறையாக ஆசிரியர் விளக்கிச் செல்கிறார். ஆதலால், ஒவ்வொரு பிரிவும் (அதிகரணமும்) ஐந்து பாகுபாடுகள் கொண்டு விளக்கப்படு கின்றன.

ஒன்று: எடுத்துக் கொண்ட கருத்து; இரண்டு: அக் கருத்தின்மேல் யார்க்கும் இயல்பாக எழக்கூடிய ஐயங்கள்; மூன்று: சிந்திப்போர் பலரும் அவற்றிற்குக் கூறும் விடைகள்; நான்கு: மெய்கண்டார் முடிந்த முடிவாக நிறுத்துக் கூறும் முடிபுகள்; ஐந்து: அவ்வாறு முடிபு கூறுதற்கு அமையும் இயைபுகளுடன், அடுத்த பிரிவோடு பொருந்தும் இயைபுகளும் கூறப்படும்.

ஒவ்வொரு பிரிவும் இங்ஙனம் ஐந்து வகையாகப் பிரிக்கப் பட்டு முடிவுகள் தெரிவிக்கப்படுவதனால் ஐயங்கள் எல்லாம் நீங்கிவிடுகின்றன; அறிவு தெளிவடைந்து நம்பி இயல்பு தேர்ந்து பயின்று பயன் எய்த முடிகிறது.

முதல் நூற்பாவின் முதல் கருத்து; ‘அவன் அவள் அது என்னும் உலகத் தொகுதி முத்தொழில் உடையது’ என்பது.

இது ஆசிரியர் தழுவி எடுத்துக் கொண்ட கருத்து; இதன் வகைகள்:

1. ‘அவன்’ ‘அவள்’ ‘அது’ என்னும் உறுப்புக்களை உலகம் உடையது.

2. இங்கே ஆண் உயிரும், பெண் உயிரும், அவற்றின் உடம்புகளும் ஏனைய உலகப் பொருள்களும், உலகத் தொகுதி எனப்படுகின்றன.

3. ‘அவன்’ ‘அவள்’ என்னும் உயர்திணையும், ‘அது’ என்னும் அஃறிணையும் கூடியது உலகம்.

4. உயர்திணை என்னும்போது, 'அவன்' 'அவள்' என்னும் சொற்கள், உடம்புகளோடு கூடிய உயிர்களைக் குறிக்கின்றன.

5. அஃறிணை என்னும்போது, அவ்வுயிர்களின் உடம்புகளையும் உயிர்களையும் தனித்தனியாகக் குறிக்கின்றன.

6. உடம்புகள் குறிக்கப்படுவதனுல், அவற்றின் கருவிகளும், உலவும் இடங்களும், புழங்கும் பொருள்களும் (தனு கரண புவன போகங்கள் நான்கும்) அடங்குகின்றன.

7. 'அது' என்று குறிக்கப்படுவது, நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐந்து பூதப் பொருள்களும் கூடிய உலகம்.

8. 'அவன்' 'அவள்' என்னும் சொற் பாகுபாடுகள் வருதலால், 'அகம்' 'புறம்' என்னும் பொருட் பாகுபாடுகளும் எண்ணும்படி இருக்கின்றன.

9. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இவை மூன்றும், 'அவன்' 'அவள்' 'அது' என்பவற்ருல் விளங்குகின்றன; 'அவை' என்னும் சொல்லால், 'பலவின் பா'லும் தெரிகின்றது. அவன் சொல் ஆண்கள் அனைவரையும் அவள் சொல் பெண்கள் அனைவரையும் குறிப்பதனுல், 'பலர்பா'லையும் வெளிப்படுத்துகின்றதென்று கொள்ளலாம்.

10. மேலும், 'அவன்' 'அவள்' 'அது' என்னும் சொற்களால் ஒருமையும், 'அவை' என்னும் சொல்லால் பன்மையும் ஆகிய எண்களைக்கூட அறிந்துகொள்ளலாம்.

11. அதோடு, அவையெல்லாம், படர்க்கை இடத்தில் இங்கே கூறப்படுகின்றன.

12. எல்லாம், எழுவாய் வேற்றுமையில் வருகின்றன.

ஆகத் திணை பால் எண் இடம் வேற்றுமை என்னும் ஐந்தும் இம் முதற் பிரிவிலேயே தெளிந்துகொள்ளலாம்.

13. 'எனும்' என்னும் சொல்லால், 'நூல் வழக்கு' 'உலக வழக்கு' என்னும் இருவகை வழக்குகளும் பெறப்படும்.

14. 'அவை' என்னும் சொல், உறுப்புப் பாகுபாடுகளைக் குறிப்பதனுல், உலகம் முத்தொழிலைக் குறிப்பதாகின்றது.

15. 'தொழில்' என்று சொன்னுல் தோன்றுதலும், சில காலம் இருத்தலும், அதன்பின் மறைந்துபோதலுமாகிய முத்தொழில்கள், இயல்பாய்க் கொள்ளப்படுகின்றன.

16. நமக்குத் தெரிவது பெரும்பாலும் நிகழ்கால நெறியாகிய ‘இருத்தல்’ என்பது. இறந்த கால நெறியாகிய ‘தோன்றுதலை’யும், எதிர்கால நெறியாகிய ‘மறைதலை’யும் இருத்தல் என்னுந் தொழில், துணையாகக் கொண்டிருக்கிறது. அதனால், ‘இருத்தல்’ நிலையைக் கொண்டு, உள் பொருள்தான் இவ்வாறு முத்தொழிலையும் அடையும் என்று அறிந்துகொள்ளலாம்.

17. உலகத்தில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் இனம், ஒருங்கே தோன்றி ஒருங்கே இருந்து ஒருங்கே மறைந்து போதலை அறிகின்றோம். உலகம் முழுதும் ‘சடம்’ என்னும் ஒரே இனமானதனால் உலகம் ஒரு காலத்தில் ஒருங்கே அழிந்து போகவுங் கூடும் என்னும் உண்மையும் தெரிகின்றது.

18. உலகம் மொத்தத்தில் ஐந்தொழில் உடையதாயினும் ‘தோன்றல்’ ‘இருத்தல்’ ‘மறைதல்’ மட்டும் கூறப்படுகின்றன. ‘மறைத்தல்’ ‘அருளல்’ என்னும் வேறு இரு தொழில்கள் வெளிப்படையாய்க் காணப்படாமையால் கூறப்படவில்லை.

19. அந்த இரு தொழில்களும் நிகழும் இடம் உயிர்கள்; ‘அவன்’ ‘அவள்’ என்பதில் ஆண் உயிரும் பெண் உயிரும் அடங்கிக் காணப்படுவதுபோல, அவ் விருதொழில்களையும் இங்கே உள்ளடக்கமாய் வைத்து முத்தொழில் கூறப்படுகின்றன.

20. ‘அவன்’ என்பதில் ஆண் உயிர்களெல்லாமும் ‘அவள்’ என்பதில் பெண் உயிர்கள் எல்லாமும் அடங்குவது போல, ‘அது’ என்பதில் உயிரற்ற மற்றப் பொருள் பலவும் அடங்குகின்றன.

21. தொழில்கள் நிகழ்வது சடப்பொருள்களில்; ஆதலால், ‘அவன்’ ‘அவள்’ என்பதில், சடம் போலக் காணப்படும் தனித்த உயிர்களும் கொள்ளப்படும்.

இவைபோல்வன நூற்பாவின் முதற் பிரிவில் வெளிப்படும் கருத்துக்கள். இவற்றின்மேல் பலர்க்கும் பல ஐயங்கள் இயல்பாகத் தோன்றக் கூடும்.

ஐயங்கள் :*

1. அவன் அவள் அது என மூன்று உறுப்புகள் மட்டும் உலகத்துக்குக் கூறப்படுவதனால், அவற்றுள் உயர்திணை அஃறிணை யாவன என்னென்ன?

---

*ஐயங்கள் என்று வருவன, பொதுவாக நூற்பாவின் மேல் எழுவன; இங்கே கூறப்பட்ட வகைகளின் முறையில் அல்ல.

2. அன் அள் என்னும் விகுதிகள் எதைக் குறிக்கின்றன? உயர்திணை விகுதிகள் என்றால் 'அவன்' 'அவள்' என்னும் சொற்கள் அஃறிணைக்கு வருமா?

3. 'அது' என்னும் சொல்லில் அவ்வுயிர்களின் உடம்புகள் அடங்கும் என்று சொல்வதில் தடை உண்டா?

4. 'அவை' என்னும் சொல்லில் 'அவன்' 'அவள்' என்பவை, அஃறிணையாய் வருவது எப்படி? அச் சொற்களை உயர்திணையாகவே கொள்ளலாமா?

5. 'அவன்' 'அவள்' என்னும் சொற்கள் உயிர்களையும் உடம்புகளையும், தனித்தனியே குறிக்குமானால் அதற்குத் தடை ஏதாவது உண்டா?

6. இரண்டாம் நூற்பாவில் 'அவை' என்பது, 'சேதனப் பிரபஞ்சம்' என்று சிவஞான முனிவரால் உரைக்கப்படுவதனால், அச் சொற்கள் உயிர்களைக் குறிக்கின்றன என்றே வைத்துக் கொள்ளலாமா?

7. பொதுவாக 'உயிர்' என்று சொல்லிவிடாமல், 'அவன்' 'அவள்' என்று ஆசிரியர் பிரித்துக் கூறுவானேன்?

8. உயிர்களில் ஆண் பெண் என்பது உண்டா? உடம்புகளில் மட்டுந்தான் அவ் வேறுபாடு காணப்படுகின்றதா?

9. சிவஞானபோதம் முதல் நூற்பாவில் பலர்பால் வருகின்றதா?

10. ஆறறிவுக்கும் குறைந்த சிற்றுயிர்கள் எதில் அடங்கும்?

11. 'அவை' என்னும் வினை முதலுக்கு ஏற்றபடி அதன் பயனிலையைப் பன்மையாய் உரைத்தால் என்ன?

12. வழிநூல் ஆசிரியர், 'ஒருவன்' 'ஒருத்தி' 'ஒன்று' என்று உலகத்தைக் கூறியபடி, முதல் நூலிலும் அவ்வாறு கூறாமல் 'அவன்' 'அவள்' 'அது' எனக் கூறியதற்குக் காரணம் யாதாய் இருக்கக்கூடும்?

13. 'சடப்பொரு'ளில் தொழில் நடக்கும் என்பதற்கு ஏற்றபடி, உலக உறுப்புக்களை அஃறிணையாகக் கூறலாமா?

14. உலகம் முத்தொழிலை அடைவதற்கு, அது, உறுப்புக்களை உடையது என்னுங் காரணமட்டும் போதுமா?

15. தொழிலை ஐந்தொழில் என்று கூருமல் முத்தொழில் என்று ஆசிரியர் கூறுவது ஏன்?

16. முத்தொழில் கூறுவதில் ஐந்தொழில் அடங்குமா?

17. உடம்பு என்பது நுண்ணுடம்புகளையும் குறிக்குமா? முத்தொழில் நிகழ்ச்சி அப்போது எப்படி?

18. உலகம் என்பதில் உயிர்களும் உறுப்புக்களாகு மானல், உலகத்துக்கு ஐந்தொழில் கூறுவதுதானே முறை?

19. பிரிவுகளை இயைபில்லாமல் கூறினுல் நூற்பா ஆகாதா? இயைபு கூறுவதாய் இருந்தால் எல்லா நூற்பாக் களிலும் அப்படி வருகின்றதா?

20. தொழில் நிகழ்வது 'சடப் பொருள்க'ளில் என்ருல், உயிர்கள் பிறப்பிக்கப்படுகின்றன என்பதில் உண்மையில்லையா?

இங்ஙனம் ஐயங்கள் பல பலர்க்கும் எழலாம். சமயச் சிந்தனையாளர் இவற்றிற்கெல்லாம் என்ன கருத்து கூறுகின்ற னர் என்பதையும் எண்ணிப் பார்க்கலாம்.

சமயச் சிந்தனைகள்:

இச் சிந்தனையாளர் இருபத்து நால்வரில், முதல் ஐவரின் கொள்கைகள், உயிர்களையே ஒப்புக்கொள்வதில்லை. அவை, உலகாயதர் சிந்தனையும், பவுத்தர் நால்வகையார் சிந்தனை களும் ஆகும். ஐவரும் புறப்புறச் சமயங்களிற் சேர்ந்தவர்கள். புறச் சமயத்தார் ஆறு வகையாரில் மாயாவாதிகள் என் பவர்கள், உயிர் தனியே உண்டு என்பதை உடன்படாதவர்கள்; மற்றவர்கள், உயிரை ஒப்புக்கொண்டாலும் உயிரின் இயல்பு களை முற்றும் சிந்திக்காதவர்கள்;

பொதுவாக, இவர்களெல்லாரும் உயிர்களையோ உலகத் தையோ பற்றிய முழுச் சிந்தனைக்கும் முடிவுகளுக்கும் உரியவ ரல்லர்.

ஆதால், உலகாயதரும், பவுத்தரும், மாயாவாதிகளும் உயிர்களைப்பற்றி ஏதும் சொல்லுவரென்று எதிர்பார்ப்பதற் கில்லை; மாயாவாதிகள் உயிரும் உலகமும் பொய் என்பவர்கள், உயிரும் உலகமும் இல்லை என்பவர்கள்; ஆதலால், உலகம் முத் தொழிலுடையது என்பதற்கும் இவர்கள் எதிர்பார்ப்பது பய னில்லை. உலகாயதரும் மீமாம்சகரும், உலகம் இருக்கிறபடியே அழியாமல் என்ஞான்றும் நிலைகொண்டிருக்கும் என்னுஞ்

சிந்தனையுடையவர்கள்; இவர்கள் கருத்தை ஆசிரியர் ஏற்றுக் கொள்ளவில்லை.

சித்தாந்த முடிவுகள் :*

1. அவன் அவள் அது என்பதில் 'அவன்' 'அவள்' இரண்டும் உயர்திணை; 'அது' என்பது அஃறிணை.

2. 'அன்' 'அள்' என்னும் விகுதிகள் உயர்திணைக் குரியன. 'அவன்' 'அவள்' என்னும் சொற்கள் அஃறிணையில் வரா.

3. 'அவன்' 'அவள்' என்னும் சொற்கள் உடம்புகளோடு கூடிய உயிர்களைக் குறித்து உயர்திணையில் வருதலால், அச் சொற்களில் அவற்றின் உடம்புகளும் அடங்கும். 'அது' என் பதில் அடங்கா.

4. 'அவன்' 'அவள்' என்னும் சொற்கள் ஆண் பெண் உயிர்களையும், ஆண் பெண் உடம்புகளையும் தனித்தனியே இரட்டுற மொழிதலாலும், 'அவை' என்பது பொதுவாக உலக உறுப்புக்களைக் குறிப்பதாலும், அஃறிணையாகவும் வருகிறது. 'அவை' என உறுப்புக்கள் குறிக்கப்படும்போது அவ்வுறுப் புக்கள் அஃறிணையே. இரட்டுற மொழியுங் கருத்தில் 'அவன்' 'அவள்' என்பன அஃறிணையாகவும், ஒரே கருத்தில் உரைக்கப் படும்போது உயர்திணையாகவும் வருகின்றன.

5. அவன் அவள் என்னும் சொற்கள் உயிர்களையும் தனியாகக் குறிப்பது இரட்டுற மொழிதல் என்னும் வழக்காத லால், தடை நிகழ்த்தக் காரணமில்லை.

6. இரண்டாம் நூற்பாவில் வரும் 'அவை' என்பது, உட லோடு சேராத உயிர்களையே குறிக்கின்றன.

7. பிரித்துக் கூறியது ஆண் பெண் என்னும் உயிர் வேறுபாடுகள் தெளிவித்தற்கே.

8. உயிர்களில் ஆண் பெண் என்பது உண்டு; அவற்றின் அடையாளமாகவே புறத்தில் ஆண் பெண் உடம்புகள் தோற்று கின்றன.

9. சிவஞானபோதம் முதல் நூற்பாவில் 'அவன்' 'அவள்' என்னும் ஆண்பால் பெண்பால் உயிர்கள், தம்மில் இணைபிரியா தன. ஆண் உயிர் பெண் உயிர் என்னும் இரண்டையும்

*இவை, ஐயங்களுக்கு விடைகள்; (எண் வரிசைப்படி)

'ஒருவர்' என்னும் பலர்பால் விகுதிச் சொல்லால், இயைபு கருதிக் கூறப்படுவது, தமிழில் வழக்கு; ஆதலாலும், நூற்பாவில் பலர் பாலும் உண்டு.

10. ஆறறிவுக்குக் குறைந்த அறிவுள்ள சிற்றுயிர்கள் அஃறிணையில் அடங்குதலால், அவை 'அது' என்னும் சொல்லில் அடங்கும்.

11. எண்கள் வகையில், பயனிலைக்கு ஏற்றபடி அதன் வினைமுதலைக் கொள்வதே மரபு.

12. சுட்டுச்சொல் என்பதற்கு 'அ' என்னும் சுட்டெழுத்துப் பெய்து, ஆசிரியர் 'அவன்' 'அவள்' 'அது' என்று கூறினர். சுட்டி யறியக்கூடிய பொருள்களில், தொழில்கள் நிகழ்வதற்குரியனவாதலால், ஆசிரியர் இங்ஙனம் சுட்டுச் சொற்களாகக் கூறினர்.

13. அறிவுக் குறையால், உயிர்களும் சடப்பொருள்களைப் போற் கருதப்படுவதனால், அவையும் அஃறிணையாய் உலக உறுப்புக்களாயின.

14. உறுப்புக்கள் என்பன பலவாய்ச், சுட்டி அறியக்கூடியனவாய்ச் சடமாய் இருப்பதால் தொழிலுக்கு உறுப்புக்களை மட்டுங் காரணமாகக் கூறுதல் பொருந்துமாயினும், விரித்துக் கூறும்போது, அவற்றின் சுட்டுக் காரணமும் சடப்பொருட் காரணமும் விளக்கப்படும். உறுப்புக்கள் என்பதே முக்கியம்.

15. ஐந்தொழில் என்பன 'தோன்றுதல்', 'இருத்தல்', 'மறைதல்', 'மறைத்தல்', 'அருளல்' ஆகும். அவற்றில், 'மறைத்த'லும் 'அருள'லும் வெளிப்படையாய் நிகழாதவை; ஆதலால், மற்ற முத்தொழில்கள் மட்டும் கூறப்பட்டன.

16. மூன்றில் ஐந்து அடங்காதாயினும், ஐந்தைச் சுருக்கி மூன்றென்று கூறுதல் பொருந்தும்.

17. உயிர்களின் பருவுடம்பு ஒடுக்கத்துக்கிடமாய் இங்கே கூறப்படுகின்றன. பருவுடம்பு நுண்ணுடம்பை உணர்த்தாது, பருவுடம்புமட்டும், தொழில் நிகழ்ச்சிக்குக் கூறப்பட்டது.

18. ஒடுக்குங் கடவுளை மூன்றும் பிரிவில் உணர்த்துதலாலும், ஒடுக்குதல் முத்தொழிலில் ஒன்றுதலாலும், முத்தொழில் மட்டும் இங்கே கூறப்பட்டது.

19. பிரிவுகளை இயைபில்லாமல் கூறுவது, நூல் முறையாகாது; ஆதலால், நூற்பாவும் ஆகாது. அதனால், எல்லா நூற்பாக்களிலும் பிரிவுகளின் இயைபுகள் கருதப்படும்.

20. உயிர்களும் தனி நிலையில் சடப்பொருள்களாகக் கருதப்படுவதனால், அவ் வுயிர்களும் முத்தொழிற்படுவனவாகக் கூறப்படுகின்றன.

ஆராய்ச்சி :

நமக்குக் கண்கூடாகத் தெரிவது இந்த உலகம்; இதிலும், நம்மோடு உடனிருப்பதாய் நமக்கு அணுக்கமாகத் தெரிவது நமது உடம்பு. உடம்பின் அமைப்பைக் கருதிப் பார்த்தாலே, முப்பொருள்களும் விளங்கும்.

தொடர் வண்டியில் வரும்போது இதைப் பற்றி ஒருவர் என்னிடம் பேசினார்; அவர் பெயர் அரங்கசாமி; திருக்குற்றாலத் துக்குச் சுற்றுலாவாகச் செல்கிறார். சென்னையில் என் விரிவுரை களைக் கேட்டிருக்கிறார். 'உலகம் என்று சொல்லுவதில் இந்த உடம்பும் அடங்கும்; உடம்பில் உலகமும் அடங்கும்; உலகத்தை ஆராய்வதும், இந்த உடம்பை ஆராய்வதும் ஒன்றுதான்' என்று விரிவுரையிற் கேட்டிருக்கிறேன், என்றார்;

'அது மெய்தான், ஆயினும், உடம்பு நமக்கு அணுக்கமாய் இருக்கிறது. அதோடு, உலகத்தைவிட உடம்பில், அமைப்பு முறைகளின் ஆற்றல்கள் மிகுதியாகத் தெரிகின்றன. உடம்பில் உயிரும் பொருந்தியிருக்கிறது. உலகத்தில் அப்படியில்லை; நுணுகி நோக்கினால், உயிருக்குள் ஒரு பேரறிவுப் பொருள் விளங்குதலையும் அறிந்துகொள்ளலாம். உயிரில்லாத உலகத்தை விட, உயிரறிவில் அப் பேரறிவுப் பொருள் நன்றாய் விளக்கிப் பொருந்துகிறது. உடம்பே ஒரு சிறிய உலகந்தான்' என்று மேலும் விளக்க நேர்ந்தது.

ஆதலால், இவ் வுடம்பைக் கொண்டே 'உலகம்' 'உயிர்' 'கடவுள்' என்னும் மூன்று பொருள்களையும் அறிந்துகொள்ள லாம்; இதைப் பாயிரச் செய்யுளும் தெரிவித்தது.

சிந்தனை யுடையவர்கள் இயற்கைகளைச் சிறிது சிறிதாக எண்ணிப் பார்த்தார்கள். சிந்திக்கச் சிந்திக்கக் கருத்துக்கள் புலப்பட்டுக்கொண்டே வந்தன.

சிலர், சில கருத்துத் தோன்றிய உடனே இவைதாம் முடிவு என்று அவ்வளவில் நுகர முற்பட்டுவிட்டனர்; முடிவுகள் கொள்கைகள் எனப்படும். அவற்றின் வழிப்பட்ட நுகர்வுகள் ஒழுக்கங்கள் எனப்பட்டன. சிலர், வேறு சில உண்மைகளை மேலும் ஆராய்ந்து கண்டனர். கண்ட அளவில், அவர்களும், அவற்றில் திளைக்க (அனுபவிக்க) முற்பட்டுவிட்டனர்.

இப்படியே பலவகைச் சிந்தனையாளர்கள் சிந்தித்துச் சிந்தித்து அவரவர் அறிவு நிலைக்கு ஏற்றபடி அங்கங்கே முடிவுகளும் சீலங்களும் கண்டு, மேலுந் தொடர முயற்சியின்றித் தாம் ஓரளவு கண்டவற்றையே பிறர்க்கும் உரைக்க முற்பட்டுவிட்டனர்.

இதுவரையில் எல்லாச் சிந்தனையாளர்களையும் 24-வகைகளாகப் பிரிவுபடுத்தி, இவை எல்லாவற்றிற்கும் மேற்பட்டு அப்பாற்பட்டதாய்ச், சிவஞான போதக் கருத்துக்கள் ஆராயப்பட்டிருக்கின்றன. சிவஞான முனிவர், நூலின் கருத்துப் போக்குக் கேற்றபடி இயைபுகள் காட்டி உரை விளக்கம் செய்திருக்கிறார்.

எப்படியும் 'முடிவு' என்று ஒன்று இருந்துதான் ஆக வேண்டும். அதனால் 'முடிவு' என்னுங் கருத்திலேயே 'சித்தாந்தம்' என்னும் பெயரும் அமைந்துவிட்டது. சித்தம் எவ்வளவு சிந்திக்கமுடியுமோ அவ்வளவும் சிந்தித்து முடிவு செய்யப் பட்டுவிட்டதென்பது அப் பெயரின் பொருள் ;

சித்தித்தல் மட்டும் இப் பெயரால் தெரிந்ததென்று கொண்டுவி-க் கூடாது; உட்கருவிகளுள் ஒன்றாகிய சித்தம், சிந்திக்குமளவுஞ் சிந்தித்து முடிபு செய்து, மேல் உணர்வாகிய நுகர்வுக்கும் இடமாக்கிவிட்டது; அதனாலேதான் முடிந்த முடிபு என்னுங் கருத்தையுங் காட்டியது;

முன் வந்த நூல் அந்தமாகிய வேதாந்தத்துக்கு மேலும், உணர்வு அந்தமாகிய சித்தாந்தம் வந்தது. முன் மறைநூலின் முடிவைக் காட்டுவதாய் 'வேதாந்தம்' என்று ஒன்று கூறப்படுவதால் அவ் வேதாந்தம் அறிவாராய்ச்சியை மட்டும் காட்டுவதாயிற்று; காரணம், அது நூலின் முடிவு ஆதலின்; இது, அதற்குமேல் சித்தத்தின் முடிபாயிருத்தலாலும், அதற்கு மேலும் சிந்திக்கக் கருவி வாய்ப்பே இல்லாமையாலும், அறிவாகிய சிந்தனைக்குச் சிந்தனையாகவும் உணர்வாகிய நுகர்வுக்கு நுகர்வாகவும் 'சித்தாந்தம்' விளங்குகிறது;

இது, சித்த அந்தம்; சிந்தனை முடிபு; சைவ சித்தாந்தம் இதனால் வேத அந்தத்தை முன் நிலையாகக் கொண்டு, அப்படி முடிந்ததன்மேல் நுகர்தற்குரிய முடிந்த நிலையாகத் திகழ்கிறது; அவ்வவற்றின் பெயர்களே இவ் வுண்மையைக் காட்டும்.

குமரகுருபர அடிகள் இவ் வியல்புகளை நன்கு தெளிந்து, ஆண்டவனை நோக்கிக், 'துடிலை என்னும் பண்ணையில் நீ வேதம் என்னும் மரம் ஒன்று வளர்த்தாய்; அது அவ்வவர்க்கும் ஏற்றபடி பல பயன்களைக் கொண்டது; அந்த மரத்தில் முற்றிய இலை கொண்டு பலர் அவ்வளவில் மகிழ்ந்தனர். வேறு பலர் அதற்கு மேற் சென்று அவற்றின் கொழுந்துகளைக் கண்டும் கொண்டும்

மகிழ்ந்தனர். பலர் அத் தளிரை ஒதுக்கி அரும்பையும், பலர் மலரையும், பலர் பிஞ்சையும், பலர் காயையுங் கொண்டு அவ் வவ்வளவில் மகிழ்ந்துவிட்டனர்; இப்படிச் சமயங்கள் ஆறும், ஆறு வகையில் அங்கங்கே மகிழ்ந்து கிடக்க, ஆராய்ச்சிக்கு ஏற்ற (ஓரும் வேதாந்தம்) வேதாந்தக் கனியை அந்த வேத மரத்தின் உச்சியிற் கண்டு பறித்து அக் கனியைத் தமது அருணெறி உணர்வாற் பிழிந்து அதன் சாருகிய சைவசித் தாந்த அமுதைச் சிவஞானத்தாற் பருகி நுகரும் பேறு பெற் றவர் சிலரே; அந்த அமுதத்தைத் துய்க்கும் பேறு பெற்றவர், தேவரமுதத்தையும் ஒரு பொருளாகக் கொள்ளமாட்டார்கள்; வேம்பென எனக்கும் அது கைக்கின்றது; சைவசித்தாந்த அமுதமே தேன் என இனிக்கின்றது' என்று,

"குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை;
பாதப மதனிற் படுபயன் பலவே; அவற்றுள்,
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே; தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே;
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப,
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே; யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னாயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனுல்,
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே"

என்னும் பாடலில் அருள் செய்தமை கொண்டு இனிது தெளிய லாம்.

"வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்"

என்பது சிவப்பிரகாசம்.

சிந்தனைகள் எல்லாம் அவரவருடைய பக்குவ நிலைக்கு ஏற்றபடி, இங்ஙனம் ஒவ்வொன்றும் அவரவர்க்கு ஒவ்வொரு சமயத்தில் தோன்றினவை அதனுல். எல்லாம் "சமயம்" என்று பெயர் பெற்றன. அறிவு பக்குவமடைந்த சமைந்த நேரத்தை இது புலப்படுத்துகிறது. சமைந்த காலந்தான், 'சமயம்' ஆயிற்று.

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

முல்[6]—துளைத்தற் கருத்து வேர்ச்சொல்.

முல்—மூல்—மூலம் = துளைவழி, வழி, வாயில். காவிரிநீர் குழாய் மூலமாகக் கொண்டுவரப்படும், பொத்தகம் அஞ்சல் மூலம் அனுப்பப்படும், வருமான வரியைக் கணக்கர் மூலம் செலுத்தினேன்.

மூலம்—மூலியம் = வாயில். யார் மூலியமாய்ச் செய்தி தெரிவித்தாய்? (உ. வ.).

முல் — முள் — முள்கு. முள்குதல் = உட்செல்லுதல், "அமர்க்க ணமா னருநிற முள்காது" (நற். 165).

முள்—முண்—மண். மண்ணுதல் = 1. முழுகுதல். "பனிக் கய மண்ணி" (புறநா. 79). 2. நீராடுதல். "குடுமி கொண்ட மண்ணு மங்கலமும்" (தொல். புறத். 13). 3. கழுவுதல் "மண்ணி மாசற்றநின் கூழையுள்" (கலித். 107).

மண்ணுறுத்தல் = 1. மஞ்சன மாட்டுதல். "வார்க்கோல மாலை முலையார் மண்ணுறுப்ப வாடி" (சீவக. 2352). 2. கழுவுதல். (திருமுரு. 25, உரை).

முள்—மூள்—மூளி = 1. துளையுள்ளது. 2. துளையறுந்தது. 3. உறுப்பறை. 4. உறுப்புக் குறை. "சூர்ப்பணகையை மூளியாக்க" (இராமநா. உயுத். 26). 5. உறுப்புக் குறையுள்ள பொருள். எல்லாம் மூளியும் காளியுமாய்க் கிடக்கிறது. (உ.வ.). 6. குறைவுள்ள கருமம். அவன் வராமையால் அந்தக் கருமம் மூளியாய்ப் போயிற்று. 7. காதணியில்லாதவள். 8. பெண்ணைக் குறித்த ஒரு வசைச் சொல். 9. பெண்ணைக் குறிக்கும் பொதுச் சொல். "ஒரு நாழியாலும் வரும், ஒரு மூளியாலும் (மூழியாலும்) வரும்." (பழ.) = ஒரு வீட்டிற்கு ஆக்கம் அளக்கும் நாழியாலும் வரும்; வந்த மருமகளாலும் வரும்.

மூளிக்காது = 1. அணியில்லாக் காது. 2. அறுபட்ட காது.

மூளிக்காதி = காதணியில்லாதவள், ஒரு வசைச் சொல். ஆயின், கிழவியரைத் தாக்காது.

மூளிக் குடம் = ஒரு மருங்கு வாயுடைந்த குடம்.

மூளி நாய் = காதறுபட்ட நாய்.

மூளியுதடு = பிளந்த வுதடு

மூளியோடு = சிதைந்த ஓடு.

மூளி—மூழி = 1. உட்குழிந்த அகப்பை (திவா.) 2. நீர்க் கலம். "மயிற் பீலியோடு மூழிநீர் கையிற் பற்றி" (பெரியபு. திருஞான. 601). 3. நீர்நிலை. (பிங்.). 4. துழாவிக் கடையும் மத்து. (W) மூழிவாய் = பூக்கூடை. "மூழிவாய் முல்லைமாலை" (சீவக. 833).

மூள்—மூளை = 1. எலும்பின் உள்ளீடு. 2. மண்டையின் உள்ளீடு. "மூளையார் சிரத்து" (திவ். பெரியதி. 4 : 2 : 8). 3. மதி. அவனுக்குக் கொஞ்சங்கூட மூளையில்லை.

ம. மூள. ஒ. நோ : வ. மஜ்ஜா.

*OE* mearg, *OS*, *OHG* marg, *ON* mergr, *E* marrow.

முள் —முழு — முழுகு. முழுகுதல் = 1. குளித்தல். 2. அமிழ்ந்து போதல். கப்பல் முழுகிவிட்டது. 3. வினை முயற்சியில் அழுந்தி யிருத்தல். 4. தீர்க்க முடியா அளவு கடன் மிகுதல். அவன் கடனில் முழுகி விட்டான்

ம. முழுகுக, க. முழு, முழுகு, தெ. முனுகு (g).

முழுகு—முழுசு. முழுசுதல் = உட்புகுதல். "முழுசி வண் டாடிய தண்டுழாயின்" (திவ். பெரியதி. 2 : 8 : 7).

முழுசு—முழுது—முழுத்து. முழுத்துதல் = அமிழ்த்துதல். "துதிக்கை முழுத்திற்று" (ஈடு, 3 : 5 : 1).

முழுத்து—முழுத்துவி. (பி. வி.). முழுத்துவித்தல் = அமிழ்த்துவித்தல். "மன்னவரை......முழுத்து விப்பன் செங் குருதி முன்" (பாரதவெண். 126).

முழுகு—முழுக = முழுவதும். "மதிலு மாடமு மாடகச் செய்குன்று முழுகக் குழாமீண்டி" (திருவாரூ. 142).

முழு—மூழ். மூழ்த்தல் = மூழ்கச் செய்தல். "மூழ்த்த நாளந் நீரை மீனாயமைத்த பெருமானை" (திவ். பெரியதி. 6 : 8 : 2).

முழுகு—மூழ்கு. மூழ்குதல் = 1. புகுதல். "வான மூழ்கிச் சில்காற் றிசைக்கும்" (மதுரைக். 357.). 2. அழுந்துதல். "சுரையம்பு மூழ்க" (கலித். 6). 3. அமிழ்தல். "வேட்கை வெந்நீரிற் கடிப்ப மூழ்கி" (திருவாச. 6 : 41). 4. தங்குதல். "முளிமுதன் மூழ்கிய வெம்மை தீர்ந்து" (கலித். 16). 5. மறை தல். "வியன்மலை மூழ்கிச் சுடர்கான் மாறிய செவ்வி நோக்கி" (சிறுபாண். 170).

மூழ்க அடித்தல்—மூழ்கடித்தல்=மூழ்கச் செய்தல்.

முழுத்து—மூழ்த்து. மூழ்த்துதல்=ஆழ்த்துதல்.

முழுகு—*L.* mergo, mergere, *F* meger, *E* merge.

இதினின்று emerge, submerge முதலிய சொற்கள் பிறக்கும்.

*L.* mers. இதினின்று immerse, submerse முதலிய சொற்கள் பிறக்கும்.

முழுகு—முழுங்கு. முழங்குதல்=1. முழுகுதல். (செ. கு. வி.). 2. (செ. குன்றுவி.). தொண்டைக்குள் அல்லது வயிற்றிற்குள் முழுகச் செய்தல், விழுங்குதல். மடு முழுங்கி=ஒரு வகை நெல். தெ. மிங்கு.

முழுங்கு—விழுங்கு. விழுங்குதல்=பெரும்பாலும் மெல்லாமலும் வாய்க்குள் வைத்திராமலும் அல்லது பல்லிற் படாமலும் வயிற்றிற்குள் ஒரே யடியாய்ப் புகுத்தி விடுதல்.

ஒ. நோ: முடுக்கு—விடுக்கு, முறப்பு—விறப்பு.

முழுங்கு—முங்கு. முங்குதல்=1. நீருள் முழுகுதல். ''கிள்ளை......முங்கியெழும்'' (இரகு. தேனு. 14). 2. அமிழ்ந்து போதல். ''முன்னிய வங்க முங்கிக் கேடுற'' (மணி. 29 : 16). 3. முழுக்கிய நீர்போல் நிரம்பியிருத்தல். ''கொலை முங்குங் கனவிடுமால்'' (இரகு. நகரப். 25).

தெ. முங்கு. ம. முங்ஙு.

முங்குளிப்பான் (முங்கிக் குளிப்பான்)=நீரில் மூழ்கி யிரை தேடும் உள்ளான் என்னும் பறவை.

முழுகு—முழுக்கு. முழுக்குதல்=முழுகச் செய்தல். ''அயில்களும் வாளுந் தோள்களின் முழுக்கினர்'' (கம்பரா. அதிகாய. 98).

க. முழுகிசு (g).

முழுக்கு=1. குளிப்பு. பல தீட்டுக்கு ஒரு முழுக்கு. 2. அமிழ்வு.

முழுக்காடுதல்=எண்ணெய் தேய்த்துக் குளித்தல். ''எண்ணெய் சேர்த்தே முழுக்காடுவார்'' (அறப். சத. 50).

க. முழுக்காடு.

முழுக்காட்டுதல்=எண்ணெய்க் குளிப்புச் செய்வித்தல். ''கடல்வேந்தை யரன்புனலான் முழுக்காட்டு முறைமை யென்கோ'' (சௌந்த. 103).

முழுக்காளி = 1. முத்துக் குளிப்போன். (W.). 2. இழவிற்குக் குளிக்க வேண்டிய நெருங்கிய உறவினன்.

முழுகவிடுதல் = 1. பொருள் தொலையும்படி விடுதல். 2. அடைவு வைத்த பொருளை மீட்க முடியாதிருத்தல்.

முழுகாமலிருத்தல் = கருவுற்றிருத்தல். அவன் மனைவி மூன்று மாதம் முழுகாமலிருக்கிறாள்.

முழுகிக் கிடத்தல் = 1. நீரில் அமிழ்ந்திருத்தல். அடை மழையினாற் பயிர் முழுகிக் கிடக்கின்றது. 2. கடலடியிற் கிடத்தல். பன்மலை யடுக்கக் குமரிக்கோடு இந்துமாவாரியில் முழுகிக் கிடக்கின்றது. 3. முழுவதும் முடங்கிக் கிடத்தல். அவன் சொத்து முழுதும் வணிகத்தில் முழுகிக் கிடக்கின்றது. 4. ஆழ்ந்து ஈடுபட்டிருத்தல். அவன் காமக் களியாட்டில் முழுகிக் கிடக்கிறான்.

முழுகிப்போதல் = 1. அமிழ்ந்து போதல். நேற்று வந்த பெருவெள்ளத்தில் ஊர் முழுதும் முழுகிப் போயிற்று. 2. அடியோடு கெடுதல். சூதாட்டினால் அவன்குடி முழுகிப் போயிற்று. 3. அடைவு வைத்த சொத்து மீட்க முடியாவாறு கடனுக்கு உட்பட்டு விடுதல். அவன் அடைவுவைத்த நிலம் முழுவதும் முழுகிப்போய்விட்டது.

முழுக்கு—முக்கு. முக்குதல் = 1. நீருள் முழுகுவித்தல். "தீர்த்தம்...... அதிலெனை முக்கி யெடுத்து" (தணிகைப்பு. நந்தி. 60). 2. தலைமறைய (முழுக) நீர் மட்டம் உயர்தல் அல்லது நீராழம் மிகுதல். நடு ஆற்றிற் போகும்போது தண்ணீர் அவனை முக்கி விட்டது.

முக்கு—முக்குவன் = நுளையன், முத்துக் குளிப்பவன் அல்லது நீருள் முழுகி அல்லது வலையை நீரில் முக்கி மீன் பிடிப்பவன் (?). கடல் முக்குவன் = கடல் மீன் பிடிப்போன். முக்குவர் இலங்கையிலும் பழஞ்சேர நாடாகிய கேரளத்திலும் உள்ளனர். சேரநாட்டு முக்குவர் ஈழவருடனும் முகவருடனும் இலங்கையினின்று வந்ததாகச் சொல்லப்படுவர் என்று, குண்டர்ட்டு தம் மலையாள—ஆங்கில அகரமுதலியிற் கூறுவர்.

முக்குளித்தல் (முங்கிக் குளித்தல்) = முழுகுதல். "இரை கவர் ஞெண்டு முக்குளித்தூறு மளறு கிடங்கில்" (திருச்செந். பிள்ளை. செங்கீ. 10).

தெ. புக்கிளிஞ்சு. (Pukkulintsu).

முக்குளிப்பான் (முங்குளிப்பான்) = உள்ளான் என்னும் சிறிய நீர்ப்பறவை வகை.

முழு—முகு—முக. முகத்தல்=1. (நீரைக் குழித்தல் அல்லது துளைத்தல் போல) மொள்ளுதல். 2. நீர்ப் பொருளையுங் கூலப் பொருளையும் கலத்தால் அல்லது படியால் மொண்டளத்தல், முகத்தலளவை. 3. தாங்கியெடுத்தல். ''முகந்துயிர் மூழ்கப் புல்லி'' (கம்பரா. கும்பகர்ண. 129). 4. விரும்புதல். ''மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்'' (நல்வழி. 24).

க. மொகெ (g).

முக—மோ. மோத்தல்=மொள்ளுதல் (தைலவ. தைல.).

முக—முகவை=1. மொண்டு கொள்ளுதல். 2. முகத்தலளவை. 3. நீர் முகக்குங் கருவி. ''கயிறுகுறு முகவை'' (பதிற்றுப். 22 : 14). 4. அகப்பை. (W.). 5. மிகுதியாகக் கொடுக்கப்படும் பொருள். ''புகர்முக முகவை'' (புறநா. 371). 6. நெற்பொலி.

முகவைப் பாட்டு=களத்திற் சூடடிக்கும்போது பாடும் பொலிப்பாட்டு. ''பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்'' (சிலப். 10 : 137). ''முகக்கக் கொடுத்தலின் முகவையாயிற்று'' (ஷை, உரை).

முக—முகில்=கடல் நீரை முகந்து கொள்ளுவதாகக் கருதப்பட்ட மழைவான். ''கனையிருள் வானங் கடன்முகந்து'' (கலித். 145). ''முகிலுரிஞ்சுஞ் சூழி'' (பு. வெ. 6 : 22). 2. திரள். (பிங்).

க. முகில் (g), தெ. மொகுலு (g).

முழு—முழை. முழைத்தல்=''துளைத்தல், முழைத்த வான் புழை'' (பாரத. காண்டவ. 17).

முழைதல்=நுழைதல். (உ. வ.).

முழை=1. குகை. ''அவ்விசை முழையேற்றழைப்ப'' (பரிபா. 19 : 63). 2. துளைத்தல் போல் துழாவும் துடுப்பு. (W).

முழை—முகை=குகை. ''கன்முகை வயப்புலி'' (ஐங்குறு. 246). 2. மிடா. (பிங்.).

ஒ. நோ: குழை—குகை.

முழை—முழைஞ்சு=1. துளை. ''குழன் முழைஞ்சுகளினூடு குமிழ்த்து'' (திவ். பெரியாழ். 3 : 6 : 11). 2. குகை. ''மாரிமலை முழைஞ்சில் மன்னி'' (திவ். திருப்பா. 23).

முழை—மூழை=1. குழிந்த இடம். ''குன்றையம் மூல மூழைவாய் வைத்து'' (கம்பரா. மருத்து. 116). 2. உட்குழிந்த

அல்லது சமைத்த உணவை முகக்கும் அகப்பை. ''மூழை சுவை யுணரா தாங்கு'' (நாலடி. 321). 3. துழாவிக் கடையும் மத்து. (சது.).

முள்—மள்—மடு=1. ஆற்றிடைப் பள்ளம். ''ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்'' (நல்வழி. 32). 2. அருவி விழும் பள்ளநீர்க் குண்டு. மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற் றுமை (உ. வ.). 3 ஆற்றிடைக் குட்டை. ''கங்கை வருநீர் மடுவுள்'' (திருவாச. 6 : 26). 4. ஆவின் பால்மடி. மடுவங் கரை=குளக்கரை.

மடுத்தல்=வாயில் வைத்தல், உண்ணுதல். ''மடுத்தவ னஞ்சமுதா'' (தேவா. 238 : 3) 2. விழுங்குதல். ''வரவர வாய் மடுத்து'' (நீதிநெறி. 64) 3. ஊட்டுதல். ''ஒண்டொடி மகளிர் மடுப்ப'' (புறநா. 56). 4. நிறைத்தல். (W) 5. சேர்த்தல். ''பிணக்குவை கொண்டோடிக்......கடல் கங்கை மடுத்திடை தூராதே'' (கம்பரா. குகப். 21). 6. அடக்கிக் கொள்ளுதல். ''மடுத்து மாமலை யேந்தலுற்றான்'' (தேவா. 823 : 10). 7. உட்புகுத்துதல், குத்துதல். ''கூர்நுதி மடுத்தத னிறஞ்சாடி'' (கலித். 52 : 3). 8. அமிழ்த்துதல். ''ஞான வாரி மடுத்து'' (சி. சி. 8 : 16). 9. உட்செலுத்துதல். ''மதியொடு பாம்பு மடுப்பென்'' (கலித். 144 : 21). 10. மோசம் பண்ணுதல். அவனை மடுத்துவிட்டான் (இ. வ.)

மடுவிடுதல்=1. ஆற்றில் மடுவுண்டாதல். 2. கன்றைத் தாய்ப்பால் குடிக்க விடுதல்.

க. மடு.

மடுப்படுத்தல்=ஆழ்ந்திருத்தல். மடுப்படுக்குஞ் சுருதிப் பொருள். (தேவா. 80 : 10).

மடு—மடம்=கோழிகளை உள்ளடைக்கும் சுடுமண் குடாப்பு.

மடு—மடம்[2]=1. இரப்போர்க்கு உணவளிக்கு மிடம் அல் லது இரப்போர் உண்டு தங்குமிடம். 2. துறவியர் தங்குமிடம். 3. வழிப்போக்கர் தங்குமிடம். 4. ஊர்ப் பொதுக் கட்டிடம்.

இராமடமூட்டுதல்=ஆண்டுமாறிகளும் அடங்காப் பிடாரி களுமான பிள்ளைகள் பெற்றோரை விட்டுப் பிரிந்து பலவூர் சுற்றித்திரிந்து பல்லாண்டுகட்குப்பின் தம்மூர் மடத்தில் வந்து தங்கியிருக்கும்போது, அவர் பெற்றோர், தம் உறவைக் காட்டிக் கொள்ளாமலே, தம் பேரன்பினால் அவர்க்கு அறுசுவை நல் லுண்டிகளை இராத்தோறும் ஆள்வாயிலாகப் படைத்துவரல். (ஈடு, 1 : 1 : 5).

சங்கரநயினர் கோவிலில், அயலூரினின்று கட்டுச் சோறு கொண்டுவருவார் தங்கியுண்ண ஒரு மடமிருந்தது. அது கட்டுச் சோற்று மடம் எனப்பட்டது.

சிவகாசியருகில், திருவில்லிபுத்தூர் செல்லும் பெருஞ்சாலை மேல், வழிபோக்கர்க்குப் புளித்த தண்ணீர் வழங்க ஒரு மட மிருந்தது. அது புளித்த தண்ணீர் (புளிச்சாணி) மடம் என்னப் பட்டது.

இன்றுள்ள தருமபுர திருவாவடுதுறை திருப்பனந்தாட் சிவமடங்களும், பெருஞ்செல்வங் கொண்டனவேனும், உண்மை யில் துறவியர் உண்டுறையும் இடங்களே. ஆதலால் மடம் என்னும் சொல், மடுத்தல் (உண்ணல்) என்னும் வினையை அடிப்படையாகக் கொண்ட தென்சொல்லே.

வடமொழியாளர் தென்னாடு வந்தபின், அதை மட்ட (matha) என்று திரித்துக் கொண்டனர். அதற்கு வடமொழியில் மூலமில்லை. மேலும், ஆரியர் வருமுன்னரே தமிழகத்திற் பேரூர் தொறும் மடமிருந்தது

மடு—மடை. 1. தொளை. (திவா.) 2. வாய். 3. குளத் திற்கு வாய் போன்ற மதகு. "உழவ ருடைத்த தெண்ணீர் மடை" (தஞ்சைவா. 151) 4. மதகுப்பலகை. 7. நீரணை. 8. ஒடை. "மடைதோறும் கமலமென் பூச்செறி யெறும்பியூர்" (தேவா. 372 : 9). 9. அணிகலக்கடைப்பூட்டு. "மடைசெறி முன்கைக் கடகமொடு" (புறநா. 150). 10. படைக்கல மூட்டு. "மடையவிழ்ந்த......வேல்" (சீவக. 293) 11. அழுத்தின ஆணி. "மடை கலங்கி நிலை திரிந்தன" (புறநா. 97). 12. உண்ணுஞ்சோறு. (பிங்.) 13. சமையல் வேலை. "அடுமடைப் பேய்க்கெலாம்" (கலிங். 139). 14. தெய்வப் படையல். "மடை யடும் பால்" (கலித். 109).

மடைத்தொழில்=சமையல் வேலை. "மடைத்தொழிற்கு மிக்கோன்" (நள. கலிநீங். 25).

மடைநூல்=சமையற்கலை. "மடைநூற் செய்தியும்" (மணி. 2 : 22).

மடைப்பள்ளி=அரண்மனை கோயில்களின் அடுக்களை. "அடுந்தீமாரு மடைப்பள்ளியாகி" (கல்லா. 23 : 37).

மடையன்=சமையற்காரன். "மடைக்கலஞ் சிதைய விழ்ந்த மடையனை (மணி. 21 : 56).

மடையான்=மடையருகில் இரைதேடும் நீர்ப் பறவை வகை.

மடைகிடாய் முக்கந்தன் = இராமநாதபுர மன்புலத்தில், சிற்றூர்களைச் சுற்றிப் பார்க்கும் மேலதிகாரிகட்கு வேண்டிய உணவுப்பொருள்களைக் கொடுக்கும் அதிகாரி (Rd. M. 3/3).

மடைகழித்தல் = மதகு திறத்தல் (புதுவை).

மடைநிற்றல் = பெற்றம் (பசு) வேண்டும் போதெல்லாம் பால் சுரத்தல். இந்த மாடு மடைநிற்காது. (சென்னை)

மடை (சோறு)—ஒ. நோ: *OE mete*, food, *OS* meti, mat, *OHG* maz, *ON* matr, *Goth* mats, *E* meat.

மடு—மடம்—மாடம் = சுவரிற் பொத்தகம் முதலியன வைக்க உதவும் புரை அல்லது புரை வரிசை (Shelf).

மாடக்குழி = சுவரில் எண்ணெய் விளக்கு வைக்கும் சிறு புரை. மாடப்புரு = மாளிகை, கோயில், கோபுரம், பள்ளிவாசல் முதலியவற்றின் சுவர்ப்புரைகளில் வளர்க்கப்படும் பெரும்புரு வகை.

முள்—மொள்—மொண்டான் = நீர் மொள்ளுங் கலவகை. (இ. வ.)

மொள்—மொண்டை—மொந்தை = மொள் கலம். "நீர் மொள்ள மொந்தைக்கும் வழியில்லை" (அருட்பா, V, கந்தர் சரண. தனிப்பா. 2.) 2. கள் மொண்டு வார்க்கும் அளவைக் கலம். 3. சிறு மரப்பாண்டம். 4. ஒரு கட்பறைவகை. (பிங்.)

ம. மொந்த, க. முந்தெ, தெ. முந்த (t.) மொண்டை—மண்டை = 1. நீர் மொள்ளும் மட்கலம். "காதலனடி நீர் சுடு மண் மண்டையின்.........மாற்றி" (சிலப். 16 : 39.) 2. ஒரு முகத்தலளவை. (தொல். தொகை. 28, உரை.) 3. இரப்போர் கலம். "புலரா மண்டை.........கொழுநிணம் பெருப்ப" (புறநா. 103.) 4. இரப்போர் கலம் (கப்பரை) போன்ற தலையோடு. 5. தலையோடுள்ள தலைப்பகுதி. 6. தலை. "செவ்வா யனைத் தான் வணங்கா மண்டை யிருக்கும்" (அஷ்டப். திருவேங்கடத் தந். 61.) மண்டை = 7. இளவரசன் மகுடம். மண்டை கவித்தல் = இளவரசுப் பட்டங்கட்டுதல்.

ம. மண்ட, க. மண்டெ.

மொள்—மோள். மோளுதல் = துளையினின்று சிறுநீர் பாய்ச்சுதல், அல்லது கழித்தல்.

மோண்டுகொளி = அடக்கும் ஆற்றலின்றிப் படுக்கும் பாயிலும் உடுக்கும் உடையிலும் மோண்டு கொள்ளும் பையன் அல்லது பெண்பிள்ளை.

மோள்—மோட்டிரம்—மோத்திரம் (பாண்டி நாட்டு வழக்கு).

ம. முள். மோத்திரம்—மூத்திரம்—வ. மூத்ர.

———

# சங்க இலக்கியத்தில் மணிகள்

[பி. எல். சாமி, பி.எஸ்.ஸி.]

(முன் ௩௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைடூரியத்தை நன்ருகக் கதிர்ஒளி வீசும்படி செய்ய வட்டமாகவும் உருண்டையாகவும் அமைப்பர். பட்டையுடைய தாகச் செய்தால் சிறப்பாக ஒளி வீசும்.

“முழவுமரு டிருமணி மிடைந்தவின்
அரவுற மார ருகக்குவ மெனவே” —புறம். 368.

சேர அரசன் முழவு போன்ற உருவில் பெரிய வைடூரியத்தைக் கழுத்தில் ஆரமாக அணிந்திருந்தான் என்று தெரிகின்றது. புறநானூறு கூறும் முழவு போன்ற திருமணி வைடூரியமாகவே இருக்கலாம்.

“வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்”

என்று வரும் புறநானூற்றுப் (150) பாடலில் வான்கதிர் திருமணி என்று சொல்லப்பட்டிருப்பதால் இந்த மணியும் வைடூரியத்தையே குறித்ததாகலாம். வாலிய ஒளியுடைய மணி யானது சுழலும் வெண்மையான நூலிழை போன்ற கதிரை யுடைய வைடூரியம் என்று கருதலாம். இந்தக் கதிரை நூலோட்டம் என்று கூறுவர். பச்சை நிறத்திற்குள் இந்த நூலிழை போன்ற வெள்ளையான ஒளிக்கதிரே காட்டுப்பூனைக் கண் போலத் தோற்றிற்று. திருவிளையாடற் புராணத்தில் இக் கல்லைக் காட்டுப்பூனையின் கண்ணோடு ஒப்பிட்டதுடன் மூங்கில் இலை, மயில் கழுத்து ஆகியவற்றின் நிறங்களுடன் ஒப்பிட்டுக் கூறியதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் “தீதறு கதிரொளித் தெண்மட் டுருவவும்” என்று வைடூரியக் கல் விளக்கப்பட் டுள்ளது. கதிர்ஒளி விடும் தேன்துளியைப்போல இருந்த தாகக் கூறியதைக் காணலாம். பசுந்தேன் துளியைப்போல வைடூரியம் இருந்ததாகக் கூறியதென்று கொள்ளவேண்டும்.

கி. பி. முதல் இரண்டு நூற்ருண்டுகளில் பிளினி, டாலமி ஆகியோர் எழுதிய நூல்களிலும் பெரிப்புளூஸ் என்ற நூலிலும் முசிறி, தொண்டி ஆகிய தமிழகத்துத் துறைமுகங்களிலிருந்து வைடூரியம் நிறைய ஏற்றுமதியானதாகக் கூறப்பட்டுள்ளது. பாடியூரிலும், காங்கயத்திலும், புன்னாட்டிலும், வாணியம்பாடி யிலும் வைடூரியம் கிடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

கோயமுத்தூர் மாவட்டத்திலே ஆறு பட்டையுடைய சிறந்த வைடூரியம் கிடைத்ததாகப் பிளினி எழுதியுள்ளார். வைடூரியத்திற்காக உரோமர் கொடுத்த பொன் நாணயங்கள் கோயமுத்தூர் மாவட்டத்தில் நிறையக் கிடைத்துள்ளன. உரோமர் பொன்னைவிடத் தமிழகத்திலிருந்து கிடைத்த கடற்பச்சை நிறமுடைய (Acquamarine) வைடூரியக் கற்களையே மிகவும் விரும்பினர். ஈழ நாட்டில் நீலமணி போன்ற மணிகள் நிறையக் கிடைத்தனவாயினும் பண்டைக் காலத்தில் வைடூரியம் அங்கு நிறையக் கிடைத்ததாகச் செய்திக் குறிப்பு இல்லை. சங்ககாலத்தில் வைடூரியம் தமிழ்நாட்டில் கிடைத்ததாயினும் தற்காலத்தில் கிடைப்பதரிதாக உள்ளது. கோமேதகம் என்று சொல்லப்படும் கல் பண்டைக் காலத்தில் வைடூரியத்தில் ஒன்றாகவே கருதப்பட்டதாகும். பண்டைக் காலத்தில் பச்சைக் கல்லான மரகதத்தையும் வைடூரியத்தையும் ஒன்றாகவே கருதி மயங்கினர்.

மணிகளின் பலவகை நிறங்களைக் குறிப்பிட—பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் கண்களோடு ஒப்பிட்டுக் கூறுவது பழந்தமிழர் மரபாகத் தெரிகின்றது. மணிகளில் தோன்றும் நுண்ணிய நிறங்களை வேறுபடுத்திச் சொல்ல அக் காலத்தில் சொற்கள் நிறைய இருந்திருக்கவில்லை. மணிகளின் உருட்சியும் திரட்சியும் உருவும் நிறமும் பறவை, விலங்குகளின் கண்களுக்குப் பொருத்தமாகவே இருந்ததைக் கண்டே இவ்வாறு ஒப்பிட்டுக் கூறினர். குக்கிற்கண், குயிற்கண், சாதகப்புட்கண் ஆகிய உவமைகள் பண்டைத் தமிழ் மரபில் தோன்றியவையே. மற்றும் இந்திரகோபம், மாதுளம்பூ விதை, முயல் இரத்தம், குன்றிமணி, கவிரலர், மயிலின் கழுத்து, பொன்வண்டின் வயிறு, மின்மினிப்பூச்சி ஆகிய இயற்கைப் பொருள்களின் நிறங்களுடன் மணிகளின் நிறங்களை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். இந்த மரபிற்கு வடமொழியில் வரலாறு இல்லை. பண்டைக் கிரேக்க ஆசிரியர்கள் முத்துமணியை 'மீன்கண்' (fish-eye) என்று அழைத்துள்ளனர். கடலில் கிடைக்கும் முத்தை மீன் கண்ணிற்கு ஒப்பிட்டுக் கூறியது பொருத்தமே. இந்த மீன்கண் என்ற முத்தின் பெயரும் பண்டைத் தமிழ் மரபைப் பின்பற்றிக் கிரேக்கர்கள் வழங்கியிருக்கலாம். மதுரையில் உள்ள பண்டைத் தமிழ்த் தெய்வமான மீனாட்சியம்மன் மீன்கண்ணி, அங்கயற்கண்ணி என்ற பெயர்களுடன் அழைக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும். இந்தத் தெய்வத்தையே முத்துமீனாட்சி என்று அழைப்பதையும் காணலாம். பண்டைக் காலத்தில் இந்தத் தெய்வத்தின் கண்கள் விலையுயர்ந்த பாண்டி நாட்டு முத்தால்

அமைக்கப்பட்டிருக்கும் என்று கருதலாம். சங்க காலத்திலேயே மணிக்கண் காக்கை, மணிக்கண் பேடை என்ற வழக்குகள் பாடல்களில் வழங்கியுள்ளன. ஆதலின் மணிகளின் நிறங்களைப் பறவை, விலங்குகளின் கண்களோடு ஒப்பிட்டுக் கூறுவது சங்க காலத்திலிருந்து தொன்றுதொட்டுவந்த மரபாகும். மணி என்ற பெயரே தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றதாக மொழிநூல் வல்லுநர் கருதுகின்றனர்.

பண்டைத் தமிழர் மூன்று பொருள்களை விலைமதிப்பிற் கரியவையாகக் கருதினர். அவை பொன், மணி, முத்து ஆகும். இவை மூன்றும் தமிழ்நாட்டில் கிடைத்து வந்தன. வெளிநாட்டி லிருந்தும் வரவழைக்கப்பட்டன. இவற்றை மூவேறு தாரங்கள் என்று கூறினர். தருவிக்கப்பட்டவை என்ற பொருளில் தாரம் எனப்பட்டதாகக் கருத வேண்டும்.

"நீர்திகழ் சிலம்பி னன்பொன் னகழ்வோன்
கண்பொரு திமைக்குந் திண்மணி கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க
தெண்ணீ ராவி கடுக்கு முத்தமொடு
மூவேறு தாரமு மொருங்குடன் சாற்றி" —அகம், 282.

"பொன்னும் துகிரும் முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்" —புறம், 218.

பவளத்தையும் விலையுயர்ந்ததாகவே கருதினர். சங்ககாலத் திலேயே மணிகளின் குற்றத்தையும் குணத்தையும் பழந்தமிழர் தெரிந்திருந்தனர். ஆனால் அவற்றைப்பற்றிய விரிவான விளக்கங்கள் சிலப்பதிகாரத்திலும் அதன் உரைகளிலும், கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் கிடைக் கின்றன. பண்டைத் தமிழர்கள் சிறந்த உயரிய மணிக்கற்களைத் திருமணி என்றழைத்தனர். மணிகளில் குற்றமற்றவையைத் தூமணி என்றும் ஆய்மணி என்றும் அழைத்தனர்.

"இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண்ணகன் தூமணி பெறூஉ நாடன்"
—குறுந்தொகை, 379.

கண்விரிந்த தூமணியை மலைக்குன்றின் பழங்குழியில் அகழ்ந்து எடுத்ததாகக் குறுந்தொகை கூறியதைக் கவனிக்கவேண்டும். "ஆய்மணி பொதியவிர்ந் தாங்கு", (நற்றிணை 239), "அழலவிர் மணி" (ஐங்குறுநூறு, 232) என்று வரும் சங்கநூல் வழக்குகளி லிருந்து உயர்ந்த மணிகள் கதிர்விரித்தலைப் பொதியவிழ்ந்தது

போல இருந்ததாகவும் நெருப்பு அவிர்ந்ததுபோல இருந்த தாகவும் கூறி விளக்கியிருப்பதைக் கவனிக்கவேண்டும். மணி களின் கதிர்கள் கண்ணைப் பொரும்படி ஒளிவீசும் என்று கூறி யுள்ளனர். ''கண் பொருதிமைக்கும் திண்மணி கிளர்ப்ப'' (அகம், 282) என்றும், ''கதிர்விடு மணியிற் கண்பொரு மாடம்'' (புறம், 53) என்றும் கூறப்பட்டதிலிருந்து மணிகள் விடும் கதிர்கள் கண்ணைப் பொரும்படியாக இருக்க வேண்டும் என்று கருதினது தெரிகின்றது. ''திருமணி பொருத திகழ்விடு பசும் பொன்'' என்ற பதிற்றுப்பத்து வரிக்கு (16 : 15) உரை கூறிய போது பொருத என்ற சொற்கு மாறுபட்டுத் தோன்றிய ஒளி என்று பொருள் கூறியதைக் காணலாம். மணிகளின் கதிர்கள் சில குறிப்பிட்ட நிறங்களுடன் மாறுபட்டுத் தோன்றி அழகைத் தருவது இயற்கையில் கண்டதேயாகும்.

சங்கநூல்களில் மணி என்ற சொல் பெரும்பாலும் நீலத் தையே குறித்து வந்துள்ளது. நீலமணியை (Sapphire) மிகவும் போற்றினர் என்று தெரிகின்றது. மணி என்ற சொல் மாணிக் கத்தையும் (Ruby) சில இடங்களில் குறித்துள்ளது.

''ஆய்மணி பொதியவிழ்ந் தாங்கு நெய்தற்
புல்லிதழ் பொதிந்த பூத்தப மிதிக்கும்'' —நற்றிணை, 239

''மண்ணுறு திருமணி புரையு மேனி'' —புறம், 56

நெய்தற்பூப் போன்ற நிறமுடையது என்று கூறப்பட்டிருப்பதால் நீலமணி என்பது தெளிவாகின்றது. நீலநிறத்தையே கருநிறம் என்றும் கூறுவது சங்ககால மரபேயாகும். அதனால் நீலமணியை 'இருள்தெளித் தனையவும்' (சிலம்பு. ஊர்காண்காதை 90) என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார். இருளைத் தெளியவைத்ததைப் போல இருந்ததாகக் கூறியது நயமான உவமையாகும். பார் போசா என்ற ஆசிரியர் இடைக்காலத்தில் 'Carahatonilam' என்ற பெயருடைய நீலக்கல் கள்ளிக் கோட்டையில் கிடைத்த தாக எழுதியுள்ளார். இந்தப் பெயர் 'காரகநீலம்' (காரகத்து நீலம்) என்ற தமிழ்ப்பெயரே என்று தெரிகின்றது. நீலமணி தமிழகத்தில் அரிதாகவே கிடைத்துவந்ததாகக் கூறுவர். ஆனால், ஈழத்திலிருந்து நிறைய நீலக்கற்கள் பண்டைத் தமிழகத் திற்கு வந்து முசிறி, தொண்டி முதலிய துறைமுகங்கள் வழி யாகச் சங்ககாலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஈழநாட்டில் இரத்தினபுரத்தில் இன்றும் சிறந்த நீலக்கற்கள் கிடைக்கின் றன. நீலக்கல்லின் தலையாய தன்மை தன்னுடன் சேர்ந்த பொருளையும் நீலநிறமாகக் காட்டுவதாகும்.

"கறந்த பாலினுள் காசில் திருமணி
நிறங் கிளர்ந்துதன் நீர்மைகெட் டாங்கு"

என்று சிந்தாமணியில்(கஙஉரு)கூறப்பட்டுள்ளது.கறந்த பாலில் நீலக்கல்லைப் போட்டால் பாலும் நீல நிறமாகக் காட்சியளிக்கும் என்று கூறியுள்ளார். பண்டைத் தமிழகத்தில் சேலத்திலும், மலையாளத்திலும், காவிரிப்படுகையிலும் நீலக்கற்கள் சிறிதளவு கிடைத்ததாக வெளிநாட்டு ஆசிரியர்கள் குறிப்பிலிருந்து தெரிகிறது. இதை Nilion என்று குறிப்பிட்டுள்ளனர். நீல மணிகளில் கருநீல மணிகளையே பண்டைத் தமிழக மக்கள் மிகவும் சிறப்பாகக் கருதினதாகத் தெரிகின்றது. கருநீல மணியை ஆடவரின் நிறத்திற்கு ஒப்பிட்டுக் கூறும் ஒரு மரபும் வழங்கி வந்தது.

(தொடரும்)

——

## தமிழ்நாட்டு மணியும் முத்தும்

நவமணிகளில் இந்திய நாட்டு வைரமும், முத்தும் உலகப் புகழ் பெற்றவை. தமிழ்நாட்டின் பெருமையை மிகப் பழங் காலம் முதலே இந்த நாட்டில் தோன்றிய முத்துக்கள் பிற நாடுகளுக்கெல்லாம் அறிவித்து வந்தன. தென்பாண்டி நாட்டில் கொற்கைத் துறையில் எடுத்த முத்துக்கள், எகிப்து ரோம் முதலிய நாடுகளுக்குச் சென்று, வாணிகத்தால் அந் நாடுகளைத் தமிழ் நாட்டோடு தொடர்பு படுத்தின. இங்கிலாந்து மன்னரது மணி முடியிலே விளங்கும் நமது நாட்டுக் கோகினூர் என்னும் வைரம் பெரிய வரலாற்றை உடையது.

'நவமணிகள்' பக். 12.

# பாராட்டும் பண்பு

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

நாகரிகம் :

எது நாகரிகம்? இந்தக் கேள்விக்கு அவ்வளவு விரைந்து விடையளித்துவிட முடியாது. எதையெதையோ நாகரிகம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் இக்கால வுலகுக்கு உண்மையான நாகரிகம் எது என்று உணரக்கூட நேரம் இல்லை. பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் உலகம் நின்று சிந்திக்க நேரம் இல்லாது காலத்தைச் செலுத்திக்கொண்டிருக்கின்றது. சுருக்கமாகக் கூறினுல் அகப் பண்பாடே நாகரிகம் என்று உரைப்பது பொருந்தும்.

''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்''

''முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்''

என்ற தமிழ்மறை, நற்றிணை வரிகள் இந்த உயர் நாகரிகத்தின் சிறப்பினை உரைக்கின்றன. பண்பட்ட உள்ளம் உடையவரே நாகரிகம் உடையவர் ஆவர். இந்த நாகரிகம் உடையவரே கற்றவரால் மிகுத்துரைக்கப் பெறும் சிறப்புப் பெற்று உயர்வர். இஃது இல்லாதார் இழித்துரைக்கப் பெறுவர் என்று உரைத்தல் மிகை.

பண்பும் பாராட்டும் :

நலம் கண்டவிடத்துப் பாராட்டுவது இத்தகு பண்புடையார் மாட்டுக் காணும்,

''நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு''

என்று தமிழ்மறையும் அறிவுடையோர் பண்பு பாராட்டுவதே என உரைக்கின்றது. நீதியும் அறமும் புரிந்தாரைப் பாராட்டுவர் உயர்ந்தோர் என்பது கருத்து. பாராட்டும் பண்பு மேலும் சிறக்கத் துணை நிற்கும் என்பதே அடிப்படைச் சிறப்பு. அந் நலத்திற்குரியார் யாவராயினும் பாராட்டுவது குறிப்பிடற் குரியது. 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்,

எத்தன்மைத்தாயினும் மெய்ப்பொருள் காணும்' மேதகு பண்பாடு பெற்றிருப்பதால் இந்த இயல்பு இவர்கட்குப் பொருந்துகின்றது. தம்மிடம் ஏவல் செய்பவராயினும், அவர் மாட்டும் பாராட்டத்தகும் செயல் கண்டால் மனமாரப் பாராட்டு தல் இம் மாண்புடையாரிடத்து இயல்பாக இருக்கும். அக நானூற்றுப் பாடல் ஒன்று இந்தப் பண்பை எடுத்துரைப்பதாக உள்ளது. ஒக்கூர் மாசத்தியார் என்ற பெண்பாற் புலவர் இந்தப் பண்பாட்டினை ஒவியமாக்கி யுள்ளார். இந்த அழகிய கவிதை யினைக் கருத்தூன்றிக் கற்குங்கால் நாமும் ஒவியமாகி விடுகின் றோம். ஆழ்ந்த உணர்ச்சி ஒன்றை எடுத்துக்கொண்டு, பண் பாட்டின் அடிப்படையில் அதனை விளக்கியுள்ளார் இக் கவிஞர் பெருந்தகை.

ஓர் ஒவியப் பாடல் :

நாட்டின் நலத்திற்காகத் தன் மனைவியைப் பிரிந்து சென் றான் தலைவன் ஒருவன். தன் இன்ப வாழ்வைத் துறந்து நாடு காக்கும் போர்க்களம் சென்று துன்பங்கள் பலவற்றை ஏற்றான் அத் தூயோன். இஃது அக்காலத் தமிழ் மாந்தர் திறன். வீடொன்றே கருதியோர் அல்லர் அக்கால விழுப்புகழோர். பரந்து விரிந்த நாட்டின் நல்வாழ்விற்காகத் துன்பங்கள் பல வற்றையும் ஏற்கும் இயல்பினர் அவர். போரில் வீரத்துடன் போராடுதலையும், விழுப்புண்பட்டு உயிர் சாதலையும் கூட அவர்கள் இனிதாகக் கருதிய இயல்பினர். அந்தத் தலைவனும் அந்த நெறியில் வந்தவனே ஆதலின், மன்னன் அழைப்பிற்கு இணங்கி நாடு காக்கும் செயல் தலைப்பட்டான். போர் முடிந்தது; புரவலன் வெற்றி பெற்றுவிட்டான். பாசறையிலிருந்த மன்ன னிடமிருந்து ஆணை பெற்றுப் புறப்படுகின்றான் அம் மாவீரன்.

தேரில் ஏறுகின்றான்; அவனுக்கு வாய்த்த தேர்வலவன் சிரிய திறன் படைத்த செம்மலன். விரைந்து செலுத்தும் பண் புடையான். பன்னாள் அநுபவம் உடைய வலவன் ஒட்ட நெடுந் தேர் ஏறிய அத் தலைமகன் நெஞ்சில், தன் மனைவிமாட்டுக் காதல் அரும்பிப் பொங்குகின்றது. போர்வினை மேற்கொண்ட போழ்து தன் துணைவியைச் சிறிதும் சிந்தையிற் கொண்டா னல்லன் அத் தூயோன். 'செய்வினை முடித்த செம்மல் உள்ளம்' உடையானாதலின் இப்போது மனைவியை அவனது மாண் பமைந்த மனம் உன்னுகின்றது. 'புரிந்த காதலொடு' என்ற இரண்டே சொற்களில் இந்த அன்பின் ஆழத்தைக் கவிஞர் உரைத்து விடுகின்றார். வலவன் ஒட்டிய அத் தேர் மிக விரைந்து வீடுவந்து சேர்கின்றது. தலைவனுடைய நினைவறிந்து மிக்க

விரைவில் மனைவந்து சேர்த்த வலவனின் திறன் அறிந்து பாராட்டுகின்றான் தலைவன். இந்த நயமான பாராட்டுத்தான் இந்தப் பாட்டிற்கு அடிப்படை.

''தேரில் ஏறியதுதான் அறிவேன்; அதற்குள் இல்லம் வந்து விட்டது. வந்தவாறு சிறிதும் அறியேன்'' என்று தொடங்குகின்றான் தலைவன். அவ்வளவு விரைவாகத் தேர் வந்து விட்டது என்பதை நம் நெஞ்சில் தெளிவாக்கி விடுகின்றது பாட்டு. முல்லை நிலத்துச் சிற்றூர் ஆகிய தன் ஊர் வந்து விட்டது இதோ. ''முயற்குட்டிகள் அங்கு மிங்கும் பாய்ந்தோடுகின்றன; வரகுக் கதிர்கள் விளைந்து கிடக்கும் புன்செய்க் காடுகள் அழகு பெற்றிலங்கும் காட்சியையுடைய'' தன் ஊர்த் தலைவன் கண்களிற் படுகின்றது. தன் மனையின் முன் தேர் வந்து நின்று விடுகின்றது. ''இறங்குங்கள்'' என்ற வலவனின் குரல் அவனை வியப்பு வெள்ளத்தில் ஆழ்த்துகின்றது. ''நின் மொழி மருண்டிசின்'' என்ற இனிய சொற்களை அவன் இதழ்கள் உதிர்க்கின்றன. ''வானிலே இயங்கும் இயல்புடைய காற்றைக் குதிரையாக்கித் தேரிற் பூட்டி வந்தாயா? அல்லது நின் மனத்தைப் பூட்டி வந்தாயா?'' என்று உரைத்து மலைபோன்ற தன் மார்பினோடு அணைத்து மகிழ்வுடன் அளவளாவிக் கொண்டே மனைக்குள் புகுகின்றான். அவனுடைய துணைவி விருந்தோம்பும் சிறப்பினைப் பெறுகின்றாள்.

இந்த அழகிய காட்சியை அருகிருந்து கண்டோர் வியக்கின்றனர். அவர்களது கூற்றே அமுதப்பாட்டாக வெளிவந்துள்ளது.

உழையர் உரைப்பது:

பெருந்தன்மை மிகுந்த ஒரு தலைமகனின் விரிந்த உள்ளமும், அவ் வுள்ளத்தினின்று வெளிப்பட்ட அன்பு தழுவிய பாராட்டும் இப் பாட்டிற்கு உயிர் நாடியாக அமைந்து ஒளி வீசுகின்றன. நனி நாகரிகம் உடைய நல்லோர், தமக்குக் கீழ்ப் பணிபுரிவோர் ஆயினும் மனமார நலம் கண்ட விடத்துப் பாராட்டுவர்; அதுவே அவர்தம் மலையனைய நெஞ்சிற்குச் சான்று பகரும் என்பது இப் பாட்டால் தெளிவாகின்றது. வாழ்வாங்கு வாழும் இயல்புடையோர் வண்டமிழ் மாந்தர் என்று பலபட விளக்குதலினும், இப் பாட்டொன்றினைக் காட்டுதலே போதும் எனுமாறு சிறந்த கற்பனையமைப்புடன் விளங்குகின்றது இக் கவிதை. 'வினை முற்றிய தலைவன் வரவைக் கண்டு உழையர் சொல்லியதாக' இதனைப் படைத்துள்ளார் பாவல்ல பெண்மணி

யார் மாசாத்தியார். அருகிருந்து கண்டோர் ஆதலின், தலைவன் வாய்மொழிகளைக் கூர்ந்து நோக்கியிருத்தல் வேண்டும் என்று கருதிக்கொள்ளுமாறு கவிதைச் செய்தி மிக்க இயல்பாக அமைந்துள்ளது.

பாராட்டும் திறம் :

'வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ?
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ?''

என்ற பாராட்டு நயமானது; எண்ண எண்ண இனிப்பது. ''வாயுவேக மனோவேகம்'' என்ற தொடர் இவ்விடத்து நினைவில் எழாமற் போகாது.

''உள்ளம்போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா''

என்று தொல்காப்பியனார் கூறுவது கருதத்தக்கது. தலைவனோடு பழகிய பாகன் ஆதலின், அவன் மனத்துக் காதலின் ஆழத்தை இனிது உணர்ந்து, அதற்குத் தகத் தலைவன் உரையாமலேயே மிக்க விரைவுடன் ஓட்டி வந்து மனைமுன் நிறுத்திய மாண்புடைமை பாராட்டத்தக்கதே யன்றோ? ''யான் கண்டனையர் என் இளையர்'' என்று பிசிராந்தையார் கூறியபடி குற்றேவல் முதலியன செய்வோர் தலைவன் கருத்தறிந்து செய்வோராக இருத்தல் பாராட்டத்தகும் என்ற உண்மை இங்குப் புலனாகின்றது.

ஏவல் கொள்ளும் தலைவன் தானாகவும், ஏவல் புரியும் பாகன் அவனாகவும், அந்த நிலைவேறுபாட்டினை எள்ளளவும் எண்ணாமல் ஒப்ப வைத்துப் பாராட்டி, மார்போடணைத்துத் தழுவியவாறே மனைக்குட் புகுந்தான் தலைவன் என்று புலவர் கூறியிருத்தல் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இக்காலத்து இத்தகு மனம் உடைய செல்வர் எத்துணைப் பேர் என்று எண்ணினால் நெஞ்சு நைகின்றது! தம்மிடம் வேலை பார்ப்போர் தம் அடிமைகள் என்று எண்ணும் தருக்கு மனம் உடையோர் இப் பாட்டுக் காட்டும் நெறியை உன்னுதல் வேண்டும். இறைவன் அருட் படைப்பில், செய்தொழில் வேறுபாட்டால் நிலைவேறுபாடுகள் இருத்தல் இயற்கையே. அது மனித உணர்வுகளை மறுத்திடுமாறு மனத்தைக் கல்லாக்கி வைத்திருத்தல் மனிதர்க்கு அழகன்று; கானகத்து வாழும் கங்கை வேடனையும் தன் உடன்பிறப்பாக எண்ணித் தழுவிக் கொண்ட இராமபிரானின் விரிந்த உள்ளத்தை இராமகாதை காட்டு

கின்றது அன்றோ? அஃது அன்றோ நாகரிகம்! அஃது அன்றோ உயர் தலைமை உடையார்க்கு அழகு! அதனை உலகிற்கு உணர்த்த எண்ணுகின்றார் மாசாத்தியார். அதனை நேரடியாக உணர்த்தினால் நன்கு பயன் விளையாது என்று எண்ணினார் போலும்! அழகிய அகப் பாட்டொன்றினால் உணர்த்திவிட்டார். பழந்தமிழ்ப் பண்பாட்டின் பெருநிலையைச் சுட்டும் அக் கவிதையின் முழு வடிவம் இது:

"'இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது, வந்தவாறு
நனியறிந் தன்றோ இலனே; தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகிற் சீறூ ராங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ' எனத்தன்
வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனன் திருந்திழை யோனே"

(அகம் - 384.)

———

பண்புடைமை

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

—குமர குருபரர்.

# கன்னடத்தில் கன்னித் தமிழ்

[இரா. மதிவாணன்]

பாலீறுகள் :

தமிழிலுள்ள அவன், இவன், உவன் என்னுந் தொடக்கத் தனவாகிய ஐம்பாற் சுட்டுப் பெயர்களும் பழங்கன்னடத்தில் உள்ளன. சுட்டுப் பெயர்களில் உள்ள பாலீறுகளும் ஏனைப் பெயர்ச் சொற்களில் உள்ள பாலீறுகளும் சிற்சில விடங்களில் வேறுபடுகின்றன. 'இவ் வேறுபாடுகட்குக் கரணியம், தலைக் கழகக்காலக் கொடுந்தமிழே பிராகிருதமாகவும், இடைக்காலக் கொடுந்தமிழே ஏனைத்திரவிட மொழிகளாகவும் மாறியிருப்பதே' என்று மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் கூறுவது ஈண்டுக் கருதற்பாற்று.[1]

| தமிழ் | கன்னடம் | கன்னட வேற்றுவடிவம் |
|---|---|---|
| அவன் | அவன், அவனு | அவம்<br>ஆதனு, ஆத (āta) |
| அவள் | அவள், அவளு | ஆகெ (āke) |
| இராமன் | ராமனு | ராமம் |
| ஒள்ளியன் | ஒள்ளிதன் | ஒள்ளிதம் |

ஆண்பால் னகர மெய்யீற்றுக்குப் பகரமாக (பதிலாக) மகர மெய்யீற்றைப் பெய்து அவம் (அவன்) என்று பேசுவதும், ஆதன் (அவன்) எனத் தகர இடைப்போலியை வழங்குவதும் ஆகிய வேற்று வடிவங்கள் வடமொழி கற்றவரால் கன்னடத்தில் புகுத்தப்பட்டனவாகும். கன்னட நாட்டு நகர்ப்புறங்களிலும் தென் மாராட்டியப் பகுதியிலும் அவ(ன்), அவள் எனப் பேசுவது, தாழ்குல வழக்கு அல்லது இடவழக்காகவும், ஆத, ஆகெ எனப் பேசுவது உயர்குல வழக்காகவும் கருதப்படுவது, கன்னட அடிப் படைச் சொல்வளத்தையே (basic vocabulary) மாற்றச் செய்யப் படும் முயற்சி போலத் தோன்றினும் அவனு, அவளு எனப் பேசும் மக்களின் தொகையே மிகுதியாக உள்ளது. ஆகெ (அவள்) என்பது அ+அக்கை—ஆ+அக்கெ—ஆகெ எனத் திரிந்த தமிழின் மரூஉச் சொல்லே. இது தெலுங்கில் அ+ அம்மை—அ+அம்மெ—ஆமே (அவள்) எனத் திரிந்திருப்பதை ஒக்கும்.

---

1. திசைச்சொல் எவை—'தமிழம்' ஆகத்து 1974. (மொழி ஞாயிறு—பாவாணர்

தமிழில் ரகரமே பலர்பா லீருதலால் அவர், இவர் என் பவையே பலர்பால் சுட்டும். அவர்கள், இவர்கள் எனக் 'கள்' ஈறு சேர்க்க வேண்டுவதில்லை என்பதும், 'கள்' ஈறு பலவின் பாலுக்கு மட்டும் பொருந்துவதாகும் என்பதும் தொல்காப்பியர் கருத்து.

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே" (தொல். சொல். 171)

(எ - டு.) யாண்டுகள் (புறம். 357) அரணகள் (பத்துப்- 10/27) மாண்புகள் (தொல்-1098-4).

ஆயின், சங்க இலக்கியங்களில் சிற்சில விடங்களில் உயர் திணைப் பெயரோடு 'கள்' ஈறு சேர்ந்து தமிழில் வழங்கியது. பிற்காலத்தில் நிலைத்த வாழ்வைப் பெற்றுவிட்டது.

(எ – டு) அரசர்கள் (கலி. 25 , 13) வானோர்கள் (சிலம்பு. 24 : 23-4) மற்றையவர்கள் (குறள்) மக்கள் (தொல்),

பலவின்பாலுக்குரிய 'கள்' ஈறு பலர்பாலில் பெருவழக்குப் பெற்றுவிட்டதை வேடிக்கையாகக் குறிப்பிட நினைந்த பெருந் தகை மு.வ. 'கள்' பெற்ற பெருவாழ்வு என்றே தலைப்பிட்டுக் கட்டுரை எழுதியுள்ளார்.[2]

கன்னடப் பலர்பாலீறும் தொல்காப்பிய நெறியும் :

கன்னடத்தில் 'கள்' ஈறு உயர்திணையில் பெருவாழ்வு பெற முடியவில்லை என்பது அனைவர்க்கும் வியப்பூட்டுவது. அஃது இன்றளவும் கண்கூடான உண்மையாகும். தொல்காப்பியரின் பலர்பாலீற்று நெறியைத் திரவிட மொழிகளுள் கன்னடம் நன்கு கடைப்பிடிக்கிறது. தமிழில் 'அவர்கள் கூடினார்கள்' என்பதைக் கன்னடத்தில் 'அவரு கூடிதரு, அவர் கூடிதர்' என்றே வழங்குகின்றனர்.

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| நாங்கள் | நாவு (நாம்—நாமு—நாவு) |
| நீங்கள் | நீவு (நீம்—நீமு—நீவு) |
| தாங்கள் | தாவு (தாம்—தாமு—தாவு) |
| எங்களுக்கு | எமகெ (யாம்+கு—எமகெ) |
| நாங்கள் +கு | நமகெ. |
| அவர்கள் பெண்கள் | —அவர் பெண்டிர் |

2. மொழியியற் கட்டுரைகள், பண்டாரகர் மு.வ.

நேராக எல்லாரும் போனார்கள் } —நெட்டனெல்லரும் போதர்

மெல்லென இருவர் நொடித்தனர் (பேசினார்கள்) } —மெல்லனிர்வர் நுடிதர்

தமிழில் மட்டும் உயர்திணைச் சொற்கள் பன்மையுணர்த்த, இரட்டைப் பன்மையாக, 'கள்' வழக்குப் பெற்று வருவதை யுணர்ந்த நச்சினார்க்கினியர் தம் உரையில் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்:

"ஆ, நாய், குதிரை, புல்வாய், தெங்கு, பலா என்னுந் தொடக்கத்துச் சாதிப்பெயர் இருபாற்கும் பொதுவாய் நின்றன. கள்ளொடு சிவணி ஆக்கள், குதிரைகள், புலிகள் எனப் பன்மை விளக்கி நின்றன. வெறியுறுகமழ் கண்ணி வேந்தர்கட்காயினும் (யாப். விருத். 67 உரை. மேற்.) எங்கள் வினையாலிறைவன் வீடிய வஞ்ஞான்றே (சீவக. 1793) என, 'கள்' ஈறு பலரை உணர்த்தி நின்றனவால் எனின், இவற்றுள் பலரை உணர்த்துதற்கு ஓதிய ஈறுகளே பலரை உணர்த்தி நின்றன. 'கள்' என்பது இசை நிறைத்து நின்றது எனப்படும். அவ் வீறுகளை ஒழியத் தாமே பலரை உணர்த்துவன உளவேற் 'கடி சொல்லில்லைக் காலத்துப் படினே' என்பதனாற் கொள்க. அஃது இக் காலத்துப் 'பெண்டுகள்' என்றாற்போல வருவன போலும்."

(தொல். சொல். 171 உரை)

நச்சினார்க்கினியரின் கூற்றிலிருந்து உயர்திணைப் பன்மையில் 'கள்' ஈறு அசை நிலையாகச் செய்யுள் வழக்கில் அரும்பி வளர்ந்து தமிழ் உலக வழக்கில் நிலைத்துவிட்டது எனத் தெரிகிறது.

தமிழகத்தோடு கொண்ட வணிகத்தாலும், இரு நாட்டு மன்னர் மரபினரின் திருமணவுறவாலும், சமயப் பொதுமையாலும் தமிழில் வழக்கூன்றிய 'கள்' ஈற்றுப் பெயர்ச்சொற்கள் சில கன்னடத்தில் புகுந்துள்ளன. சமயத்தொடர்பால் புகுந்த சொற்களையே கேசிராசனார் தம் நூலில் காட்டியுள்ளார்.

"விகலம் பெறவரெள் அருவிங்கெ களாகமம்" (சப். த. 101)

இந் நூற்பாவின் பொருள்: ஒரு சிலருக்கு அர் ஈற்றின் முன் 'கள்' ஈறு சேர்ந்து விகற்பமாகி வரும் என்பது.

(எ - டு) அவர்கள் எம்ம தந்தெகள், குருகளு (குருக்கள்) சமந்த பத்ர ஸ்வாமிகளு.

இம் மேற்கோள் சொற்களில் சமந்த பத்ர சுவாமிகள்[3] என்னும் தமிழ்நாட்டுச் சமணத் துறவியைத் தம் குரவராகப் போற்றியிருப்பது கூறப்படுகிறது. இவர் உறையூரில் (உரகபுரி) வாழ்ந்த அரசிளங்குமரர் என்பதும், சமணத் துறவியாகிப் பன்மொழிப் புலமை பெற்று பிராகிருத மொழிக்கு இலக்கணம் யாத்தவர் என்பதும் கன்னட நூல்களில் காணப்படும் செய்திகள். இவர் கன்னட நாடு சென்று அங்குச் சமண சமயத் தலைமை ஏற்றபோது தமிழக வழக்கைப் போன்றே அவர்கள் சுவாமிகள் எனும் வழக்கை ஆண்டிருக்கலாம். இப்படிப் புகுந்த சில சொற்கள் தனித்து நின்றனவேயன்றிக் கன்னடப் பெயர்ச்சொல் வழக்கை மாற்றவில்லை.

'கள்' ஈறு அஃறிணைக் குரித்து எனக் கூறிய தொல்காப்பியரே,

''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே''

எனவும்,

''மக்கள் தாமே ஆற்றி வுயிரே''

எனவும் நூற்பா யாத்தது அவர் காலத்திலேயே குழந்தைகளைக் குறித்த மக்கள் எனுஞ்சொல் பெரியவர்களையும் குறிக்கத் தொடங்கிவிட்டது என்பதைக் காட்டுகிறது.

நச்சினார்க்கினியர் 'மக்கள் கை' உயர்திணையாகவும் 'மக்கட்செவி' உயிரில்லாத அஃறிணையாகவும் கொளத்தக்கன என்பார்.

ஆயின் கன்னடத்தில் மக்கள் எனுஞ்சொல் இன்றளவும் குழந்தைகளை மட்டும் குறிக்கும் பழந்தமிழ் நெறியிலேயே நிற்பது மகிழ்வூட்டுவதாகும். ஜனரு, மந்தி (மாந்தர்) எனும் சொற்களே கன்னடத்தில் பொதுமக்களைக் குறிக்கும்.

க. மகவு+கள்—மக்கள் (குழந்தைகள்).

1. ஒக்கலில்லத ஊரு மக்களில்லத மனெயு....பலவேனு? (ஒக்கல்-அடுத்து வாழ்பவர்).

—குடியில்லாத ஊரும் குழந்தைகள் (மக்கள்) இல்லாத வீடும் என்ன பயனைத் தரும்?

2. யாவ தேவரு வரா கொட்டரு கண்டனில்லதெ மக்களாகது.

—எந்தக் கடவுள் ஈவு(வரம்) கொடுத்தாலும் கணவனில்லாமல் குழந்தைகள் (மக்கள்) உண்டாகா.

---

3. நல்நுடிகன்னடி—சப்தமணி தருப்பண விருத்தி—முன்னுரை.

# நட்பிற் பிழை பொறுத்தல்

*[பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தம் மகனுர்க்கு எழுதிய பண்பு நிறைந்த அறிவுரைக் கடிதம்]*

அன்புள்ள நடராசனுக்கு இறைவனருளால் நலமுண்டாகுக.

இவண் யாவரும் நலம். நின் இரு கடிதங்களுங் கிடைத்தன. எனக்கு இங்கு வந்தபின் உடல்நலமில்லாதிருந்து வருகிறது. இந் நிலையில் இன்றுவந்த நின் கடிதத்தைக் குறித்து என் நண்பர் அவர்களுக்காவது உனக்காவது என் கையால் கடிதம் எழுதக்கூடவில்லை. நின் கடிதத்திலுள்ள செய்திகளையெல்லாம் விவரித்து எழுதுதல் கூடாமையால் நின் கடிதத்தையே அவருக்கு அனுப்பிவிட்டேன். அதிலுள்ள சில வாக்கியங்கள் அருவருக்கத்தக்கவாயினும் செய்திகளை அவர் தெளிவாய்த் தெரிந்து கொள்ளச் செய்தற்கு வேறு வழியில்லாமையால் அதனையே அனுப்ப நேர்ந்தது. நிற்க.

இறைவன் எவ்வளவு பெருங் கருணையால் இவ் வுடம்பையளித்துள்ளா னென்பதனையும் அதன் நோக்கத்தையும் சிறிது மறியாத அறிவிலிகள்தாம் தற்கொலை செய்து கொள்வதை எளிதாக நினைப்பார்கள். மேலும் தம் கொள்கை தீதாயின் அதினின்று தன்னை மீட்டுக்கொள்வதும் நன்றாயின் எத்துணை முயற்சி யெடுத்தும் சித்திபெறுவதுமே ஆண்மையாகும். உலகியலால் நோக்கினும் தற்கொலை யென்பது அறிவும் ஆண்மையும் அற்றவர்கள் செய்யும் செய்கையே யாகும். நிற்க.

நின் நண்பன் யாரையும் பொருட்படுத்தாமல் தான் காதலித்த பெண்ணை மணந்து கொள்வதில் தடையென்னவிருக்கிறது? தாய் தந்தையர்கள் அவ்வாறு செய்யாமல் எங்ஙனம் தடுக்கமுடியும்? ஆனால் அவர்கள் கருத்துக்கு மாருக அவர்களும் சம்மதிக்க வேண்டுமென்பது நியாயமாகுமா? இவன் சில உரிமைகளைக் கொண்டாடும் பொழுது அவர்களுடைய உரிமையும் மதிக்கவேண்டுமல்லவா?

நின் கடிதத்திலிருந்தே என் நண்பரவர்கள் செய்திகளை விளக்கமாக அறிந்துகொள்வராதலால் நான் தனியாக வேறொன்றும் எழுத வேண்டியதில்லை. அன்றியும் சில பொதுப்படையான சிறந்த பண்புகள் பற்றியே எங்கள் இருவரிடத்தும் நட்பு நிலைபெற்றிருக்கின்றது. ஆனல் இருவருடைய பண்புகளினும், கொள்கை

களிலும் எத்தனையோ வேற்றுமைகள் உண்டு. அவருக்கு என்னதாந் துன்பம் நேர்ந்தபோதிலும் அதற்காக என் உயிரை விடமாட்டேன். என் கொள்கையையும் விடமாட்டேன். அதனுல் பயித்தியம் பிடித்துப் போகவும் மாட்டேன். அவருக்காக என் கொள்கையை மாற்றமுடியாத நான் என்பொருட்டு அவர் கொள்கையை மாற்றும்படி கேட்டல் பொருந்துமா? என்ருலும் என் மனச்சான்றுக்கு மாருகவே ஒரு வரி அவருக்கு எழுதியுள்ளேன். அஃதாவது 'என் ஆலோசனையைக் கேட்பீர்களானுல் அவன் போக்கிலேயே விட்டுவிடுங்கள்' என்பதுதான்.

(ஒப்பம்) ந. மு. வே. நாட்டார்.

---

## அன்பின் வழிவந்த கேண்மை

*அழிவந்த செய்யினும் அன்பருர் அன்பின்*
*வழிவந்த கேண்மை யவர்.* —குறள், 807

## போலி நண்பர்

பிழையும் பிழையும் நேர்ந்தபோது நட்பின் சிறப்புரிமையைப் பயன்படுத்தி ஒறுத்துத் திருத்தத் தயங்குபவர் போலி நண்பர்.

—பேக்கன்

## அடக்கிக் கொளல் வேண்டும்

*நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை*
*அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்*
*நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு*
*புல்லிதழ் பூவிற்கு முண்டு.*

—நாலடியார் 221

# ஊழிற் பெருவலி யாவுள ?

1976 அக்டோபர் 12 ஆம் நாள் பம்பாயில் நிகழ்ந்த வானூர்திப் பேரிடர் (Accident) இந்தியாவில் இதுவரை ஏற்பட்ட இடர்களுள் மிகவும் கொடியதாகும். அன்று இரவு 1-34 மணி அளவில் பம்பாயிலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட வானூர்தி சில மணித்துளிகளிலேயே தீப்பிடித்து அவ் வானூர்திநிலையத்திலேயே விழுந்து எரிந்து சாம்பராயிற்று.

இவ்விடரில் 17 மகளிர் உட்பட 95 பேர் மாண்டனர். அவர்களுட் பலர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றறியும்போது நமக்குத் துயர் அதிகமாகின்றது. உலகப் போக்குவரத்து வரலாற்றை நோக்கின் இப் பேரிடர் இயல்பானதே எனினும் சிற்சில செயல்கள் சூழ்நிலைகளை ஊன்றிக் கவனிக்கும்போது ஊழ்வினையின் பெருவலிமை நமக்கு நன்கு புலனாகின்றது.

வழக்கமாகப் பம்பாயிலிருந்து சென்னை செல்லும் 'போயிங் 737' ஊர்தியில் கழுகு ஒன்று புகுந்தமையால் அவ்வூர்தி புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இறக்கப்பட்டது. அதற்குப் பகரமாகத் தில்லியினின்றும் வந்த "போயிங்" விண்ணூர்தியை அனுப்ப ஏற்பாடு செய்தனராயினும், சிற்சில தடைகளால் சென்னைச் செலவில் அதிகக் காலத்தாழ்வு ஏற்படும் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது. அதுகேட்ட சிலர் எந்நேரமாயினும் எவ்வாறேனும் சென்னைக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று நிலைய அதிகாரிகளிடம் கூறி மாற்று ஏற்பாடு செய்யுமாறு தொந்தரவு செய்யவே அவர்களும் மாற்று ஊர்திக்கு வழி காணலாயினர். இங்குத் தான் ஊழின் விளையாட்டு தொடங்கிற்றுப் போலும்.

நன்னிலையில் இருந்தும், பற்பல நாட்குப் பின்னரே மறு ஆய்வு செய்யத் தக்கது என வல்லுநர்கள் சான்றளித்திருந்தும் ஆ! புறப்பட்ட அவ்வூர்தி சில மணித்துளிகளில் தீப்பற்றிப் பேரிடியோசையுடன் நிலையத்தின் அருகிலேயே விழுந்து எரிந்து போயிற்று! சென்னைப் பட்டினம் செல்ல விரும்பியவர்கள் சென்றடைந்ததோ எவருஞ் செல்ல விரும்பாப் பட்டணம்!

"போயிங்குக்கு" மாற்றாக ஏற்பாடு செய்யப்பட்டது "காரவெல்" ஊர்தியாகையால் இருபதின்மர் இடமில்லாமையால் அதில் செல்லாதது அவர்கள்தம் நல்லூழே. விடுதி உரிமையாளர் திரு. செயராமன் அவர்களும் உடன் வந்தவர்களைப் பிரிந்து பம்பாயில் தங்கியமையாலும், திரு. டி. டி. வாசு (திரு. டி. டி. கே. மகன்) அவர்கள் போலந்திலிருந்து காலந் தாழ்த்து வந்தமையாலும் இவ்வூர்தியில் செல்லாது உயிர் தப்பியமை நல்லூழ் என்பதில் ஐயமில்லை.

மற்றும் பலர் உடன் வந்தவர்களுடன் தங்காமலும், காலை ஊர்தியில் செல்லாமல் தங்கியும், அயல்நாடு செல்லக் கடவுச்சீட்டு (Visa) கிடைக்காமலும், தம்மவர்கள் பலவகையாய் வற்புறுத்தியதைக் கேளாதும் இவ்வூர்தியில் புறப்பட்டுச் சென்று உயிரிழந்தமை தீயூழே என்பது உறுதி.

இவற்றையெல்லாம் நுனித்து நோக்கினால்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (குறள் 380)

என்னுங் குறட்பா நம் நினைவுக்கு வருகின்றதன்றோ? எனினும்,

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" (குறள் 620)

என்னும் திருவள்ளுவரின் மெய்ம்மொழிப்படி மன உறுதியுடன் செயலாற்றி இத்தகைய இடர் இனி என்றுமே ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இந்திய வானூர்தி நிலையத்தாரைச் சாரும் என்பதை நாட்டு நலன்கருதி வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

—இரா. கல்யாணசுந்தரம்.

---

## திருக்குறட் செல்வர்கள்

முகவை மாவட்டத்துக் காரைக்குடியைச் சார்ந்த கண்டரமாணிக்கம் ப. சு. வித்தியாசாலையில் 5 ஆம் வகுப்பு படிக்கும் திரு. இரா. ஈசுவரன் என்னும் 8 அகவை மாணவன் அண்மையில் காரைக்குடித் திருக்குறட் கழகத்தினர் நடத்திய திருக்குறட் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றுவ்ளமை யறிந்து மகிழ்வுற்றோம்.

இச்சிறுவனின் தந்தையார் கண்டரமாணிக்கம் உயர்நிலைப் பள்ளியில் 20 ஆண்டுக் காலம் தலைமை யாசிரியராகப் பணியாற்றித் தமிழ்நாடு அரசின் விருது பெற்ற சிறப்பினர்.

செல்வன் ஈசுவரன் அனைத்துக் குறட்பாக்களையும் முறைப்படி மனப்பாடமாக ஒப்புவிப்பது மட்டுமன்றி, திருக்குறள் எண்திறல் (அட்டாவதானக்) கலையிலும் வல்லவனாக விளங்குவது குறிப்பிடத் தக்கது. திருக்குறட் செல்வன் திரு. ஈசுவரனுக்கு நம் பாராட்டும் வாழ்த்தும் உரியவாகுக!



இரா. ஈசுவரன்



சாந்தகுமாரி

குடந்தையைச் சேர்ந்த 9 அகவைச் சிறுமி சாந்தகுமாரி திருக்குறள் முழுதும் மனப்பாடமாக ஒப்பித்துப் பரிசும் பாராட்டும் பெற்றமை* அன்பர்களுக்கு நினைவிருக்கலாம்.

---

*இது பற்றிய செய்தி 'செந்தமிழ்ச் செல்வி' 50 ஆம் சிலம்பின் 9 ஆம் பரல்—பக்கம் 508 இல் வெளிவந்துள்ளது.

## மாண்புமிகு அமைச்சர் சி. சுப்பிரமணியனார்க்கு டாக்டர் பட்டம்

நடுவண் அரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கட்கு 5—11—76 இல் மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இந்தச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு ஆளுநர் மாண்பமை மோகன்லால் சுகாதியா அவர்கள் டாக்டர் பட்டத்தின் சான்றிதழினை ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களிடம் வழங்கினார்.

பின்னர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பல்துறைக் கலைப்பட்டப் படிப்புகளில் தேர்வு பெற்ற மாணவர்கட்குப் பட்டங்கள் வழங்கப் பெற்றன. இதனைத் தொடர்ந்து அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் 'பட்டமளிப்பு விழா உரை'யினை நிகழ்த்தினார். அவ்வுரையின் சுருக்கம் வருமாறு:

"பெரும் பெரும் மாறுதல்கட்கு உட்பட்டிருக்கும் இன்றைய உலகில் நாம் வாழ்கிறோம். இக்காலில் அறிவியல் மிகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அறிவியல் முன்னேற்றத்தால் மனிதன் நிலவில் நடக்கத் துவங்கி யுள்ளான். செவ்வாய் மண்டிலத்தின் மேற்பரப்பை ஆராயத் துவங்கி யுள்ளான். பண்டைக் காலத்தில் அற்புதங்கள் எனக் கருதப்பட்டனவெல்லாம் இன்று சாதாரண நிகழ்ச்சிகளாகக் காட்சி அளிக்கின்றன.

இங்ஙனம் வளர்ந்து வரும் அறிவியலோடு நுண்கலைத் தொழில்களும் பெருமளவிற்கு வளர்ந்துள்ளன. இவற்றின் துணை கொண்டு நாம் மற்ற நாடுகளுக்குச் சமமாக முன்னேற வேண்டுமானால், நாம் புதுமைப் பாதையில் சென்று வறுமை, பசி, பிணி, அறியாமை இவற்றினின்று விடுதலை பெறவேண்டும்.

இப்போது நாம் வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் பெருமளவிற்கு முன்னேறி யுள்ளோம். இருந்த போதிலும் அறிவியல் துறையில் நாம் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியுள்ளது. நாட்டுப்புறங்களிலும் அறிவியற் கல்வி பரவுதல் வேண்டும். இந்திய மக்களுள் 80 விழுக்காட்டு மக்கள் சிற்றூர்களிலேயே வாழ்கின்றனர்.

நம் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களும் அறிவியலைப் பெரிதும் வற்புறுத்தி வருகின்றனர். எனவே, நாம் அறிவியலின் துணை கொண்டு வறுமையை ஓட்டி வளத்தைப் பெருக்கப் பாடுபட வேண்டும். அதே நேரத்தில் அறிவியலால் ஏற்படும் தீமைகளை விலக்கிக் காந்தியடிகள் காட்டிய நெறியில் செல்லவும் வேண்டும். அறிவியலும் சமயமும் ஒன்றுபட்டு இருத்தல் வேண்டும். ஒன்றை யொன்று பிரிந்து இயங்குதல் கூடாது. அறிவியலோடு கூடிய சமய உணர்வினையே வினோபா பாவே அவர்களும் வலியுறுத்திக் கூறி யுள்ளனர். புகழ் பெற்ற மீனாட்சியம்மன் கோவிலைக் கொண்ட இம் மதுரை மாநகரில் அறிவியலும் ஆன்ம இயலும் ஒத்து இயங்கும் என எதிர்பார்க்கிறேன்."

குறிப்பு: பல்லாற்றானும் தகுதி பெற்ற மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கட்கு மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி யுள்ளமை சாலப் பொருந்துவதாகும். டாக்டர் பட்டம் பெற்ற அமைச்சர் அவர்கட்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா
(5—11—'76)



நடுவண் அரசு நிதி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம்
அவர்கட்கு, தமிழக ஆளுநர் மாண்பமை
மோகன்லால் சுகாதியா அவர்கள் டாக்டர் பட்டம் வழங்குதல்
ஒலிபெருக்கியின் பக்கத்தில் நிற்பவர்
துணைவேந்தர் மதிப்புமிகு சை. வே. சிட்டிபாபு அவர்கள்

# செய்திகளும் குறிப்புகளும்

## தமிழில் முதல் இசுலாமிய கலைக்களஞ்சியம் வெளியீட்டு விழா

முதன் முதலாகத் தமிழில் உருவாக்கப்பட்டுள்ள இசுலாமியக் கலைக் களஞ்சியத்தின் வெளியீட்டு விழா 12-10-76இல் கோகலே மண்டபத்தில் நடைபெற்றது. உயர்நீதி மன்ற நடுவர் மாண்பமை இஸ்மாயில் அவர்களால் கலைக்களஞ்சியம் வெளியிடப்பெற்றது. நூலாசிரியர் அப்துல் ரகீம் அவர்களைப் பாராட்டியும், களஞ்சியத்தின் சிறப்பினை விளக்கியும் அறிஞர்பலர் உரையாற்றினர். இவ் விழா முஸ்லீம் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்றது. இவ் விழாவினை யொட்டி ஒரு கருத்தரங்கும் நடைபெற்றது.

## டாக்டர் மு. வ. படத்திறப்பு விழா

28-10-76 இல் ஷெனாய் நகர் திரு. வி. க. உயர்நிலைப் பள்ளியில் டாக்டர் பி. எம். சுந்தரவதனம் அவர்கள் தலைமையில் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் படத்திறப்பு விழா நடைபெற்றது. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் டாக்டர் மு.வ. வின் படத்தைத் திறந்துவைத்துப் பரிசுகள் வழங்கிப் பேருரை யாற்றினார்.

## அமெரிக்காவில் புகை பிடித்தலுக்கு எதிர்ப்பு

புகை பிடித்தலால் விளையும் தீமைகளை எடுத்துரைக்க அமெரிக்க 'கேன்சர்' குழுவினர் ஒரு தனிக் குழுவினை நிறுவத் திட்டமிட்டுள்ளனர். இக் குழுவில் 20 நூறாயிரம் தொண்டர்கள் 5 ஆண்டுகாலம் பணியாற்றுவர் என்றும் கூறப்படுகிறது.

## கண்மதியன் நூல்கள் வெளியீட்டு விழா

கவிஞர் கண்மதியன் எழுதிய 'கண்மதியன் கவிதைகள்,' 'குறளமுதம்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா 18-10-76 இல் மைய நூலகக் கட்டிடத்தில் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'கண்மதியன் கவிதைகளை' கவிஞர் கண்ணதாசனும், 'குறளமுத'த்தினை முன்னாள் துணை வேந்தர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்களும் வெளியிட்டனர். மகாவித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை கண்மதியனுக்குக் கவிச்சிங்கம் எனும் பட்டம் வழங்கினார். கவிஞருக்குப் பொன்னாடையும் போர்த்தப்பட்டது. அறிஞர் பலர் பாராட்டுரை வழங்கினர்.

## தருமை ஆதீனத்தின் சார்பில் தவத்திரு மெய்கண்ட தேவநாயனார் குருபூசை விழா

தவத்திரு மெய்கண்ட தேவநாயனார் குருபூசை 24-10-76 இல் தருமையாதீனம் திரு ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், பெண்ணாகடம் திருமெய்கண்ட தேவநாயனார் திருக்கோயிலிலும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவநாயனார் திருக்கோயிலிலும் சிறப்பாக நடைபெற்றது அதன் சார்பாக 24-10-76இல் தருமபுரத்தில் கல்லூரித் தமிழ்ப் புலவர்கள் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ., அவர்களும் சிரோமணி வித்துவான் திரு. வி. சபேசன் அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

28-10-76 அன்று சிதம்பரம் குருஞான சம்பந்தர் திருமடத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்களும், டாக்டர். திரு. வ. சுப. மாணிக்கம் எம்.ஏ., பி.எச்.டி அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

### நெல்லை, கா. சு. பிள்ளை இலக்கிய வட்டம்

நெல்லை இலக்கிய வட்டத்தின் சார்பில் 7-10-76 இல் திரு. ம. சிவசம்பு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இனிப் பேரறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் நினைவாக இவ் இலக்கிய வட்டத்தின் பெயரை நெல்லை கா. சு. பிள்ளை இலக்கிய வட்டம் என மாற்றுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### அமெரிக்க அறிஞர் மூவருக்கு நோபல் பரிசு

மூளை தொடர்பான நோய் ஒன்றினைப் பற்றி ஆராய்ந்து சில உண்மைகளை வெளியிட்ட ஓர் அறிஞருக்கும், பொருளியல் தொடர்பான உண்மைகளைக் கண்டறிந்த ஓர் அறிஞருக்கும், சிறுவர்கட்கு வரும் தொற்று நோய் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட மற்றோர் அறிஞருக்கும் ஆக மூன்று அமெரிக்கர்களுக்கு 1976 ஆம் ஆண்டின் நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு பரிசின் மதிப்பும் 85,000 பவுன் ஆகும்.

### நாமக்கல் கவிஞர் பிறந்தநாள் விழா

மயிலை இலக்கிய வட்டத்தின் சார்பில் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் 88 ஆவது பிறந்தநாள் விழா 27-10-76 இல், மயிலை பாரதிய வித்யாபவன் அரங்கில், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல்துறை அறிஞர்கள் கவிஞரின் மாண்புகளைப் பற்றி உரையாற்றினர்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தொல்காப்பியக் கருத்தரங்கம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் பதின் மூன்றாவது கருத்தரங்கு செப்டம்பர் 16, 17 ஆம் நாட்களில் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் தொடங்கப் பெற்றது. 16-10-76 இல் திரு. ஆ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் கருத்தரங்கின் முதல் அவை தொடங்கிற்று. திரு க. சாமிஐயா அவர்கள் களவியாக்கத்தின் தனிச் சிறப்புப் பற்றி உரையாற்றினார். மற்றும் அறிஞர்கள் பலர் தொல்காப்பியத்திலுள்ள பல்வேறு பொருள்கள் பற்றி உரையாற்றினர். 17-10-76 இல் பேராசிரியர் வெள்ளைவாரணனார் அவர்கள் தலைமையில் கருத்தரங்கின் 2 ஆம் அவை கூடிற்று. அறிஞர்கள் பலர் வேறு பல கருத்துகள் பற்றி விரிவுரை யாற்றினர். தலைவர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் நன்றி உரை கூறினார்.

### மறைமலையடிகள் நூற்றாண்டு விழா

கூவலூர் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் மறைமலையடிகள் நூற்றாண்டு விழா 7-11-76 இல் கூவலூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் தென்மொழி மறை சித்தலின்பன் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இவ் விழாவினை யொட்டிப் பேச்சுப் போட்டி இசையரங்கு முதலியனவும் நடைபெற்றன. திரு. ஆ. இறையன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். புலவர் கோ. சங்கர பாண்டியன் இன்னிசைச் சொற்பொழிவாற்றினார். மருத்துவர் மா. வெங்கடேன் பரிசுகள் வழங்கினார். மற்றும் பல புலவர்களும் அறிஞர்களும் உரையாற்றினர்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

## பிறபதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| சங்க காலத்திற்கு முன் — ம. ரா. போ. குருசாமி | 5 | 00 |
| இலக்கியத் திறனுய்வு I — ஜான் சாமுவேல் | 4 | 50 |
| துறைமுகம்—சுரதா | 6 | 00 |
| எண் கணிதமும் கைரேகையும்—V. P. தியாகமூர்த்தி | 14 | 00 |
| இலக்கிய நெஞ்சம்—மு. பி. பாலசுப்பிரமணியன் | 4 | 00 |
| இஸ்லாமும் இன்பத் தமிழும் —அல்ஹாக் கலாநிதி, முகம்மது உவைஸ் | 7 | 00 |
| கவிநயம்—முருகையன் | 5 | 00 |
| கன்னிமாடம்—சாண்டிலியன் | 15 | 00 |
| திருமந்திர நெறி—ஜி. வரதராஜன் | 6 | 00 |
| பூங்கோதை—கவிஞர் கலைக்கூத்தன் | 9 | 00 |
| இராமலிங்க அடிகள் வரலாறு—ஊரன் அடிகள் | 25 | 00 |
| சி. எஸ். ஒரு கண்ணோட்டம்—மணியன் | 7 | 50 |
| கம்பராமாயண மூலம்—முருகரத்தினம் | 75 | 00 |
| தமிழாய்வு—டாக்டர் ந. சஞ்சீவி | 10 | 00 |
| திருக்குறள் பொருள் அகராதி—டாக்டர் மு. கோவிந்தசாமி | 8 | 00 |
| திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் ,, | 12 | 00 |
| தமிழகத்தில் பிறமொழியாளர்—ம. பொ. சி. | 10 | 00 |
| Path way to God trod by Saint Ramlingar —G. Vanmeeganathan | 45 | 00 |
| Kuruntokai—Dr. M. Shanmugam Pillai & David Ludden | 80 | 00 |
| Visnuism and Saivism—J. Gonda | 40 | 00 |
| Tamil-a bird's eye view —Dr. T. P. Meenakshisundaram | 30 | 00 |

## கழகப் புதிய வெளியீடுகள்

வள்ளுவர் கோட்டம் (தெலுங்குப் பதிப்பு)

சென்னை வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பு, சிறப்பு, கலைத் திறன் இன்னபிற செய்திகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்திருப்பது போலவே தெலுங்கிலும் வெளிவந்துள்ளது. தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் வள்ளுவர் கோட்டத்தினைப் பற்றித் தெரிந்து கொள்ள இவ் அழகிய கையேடு தக்க வழிகாட்டியாகும். 50 காசு

பல் பாதுகாப்பு

—டாக்டர் J. G. கண்ணப்பன், M. D. S., F.I.C.O.
—டாக்டர் ரா. கவுதமன் B. D. S.

பற்களின் அமைப்பு, பற்களுக்கு வரும் நோய், அவற்றை நீக்கும் முறைகள், பற்பாதுகாப்பு முறைகள் இன்னபிற செய்திகள் எளிய இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளன. ரூ. 2 75

திருக்குறள் நூற்றெட்டு

பொருள் விளக்கத்துடன் நல்வாழ்வுக்கு நாளும் ஓதவும் மலர் தூவி வழிபடவும், இசையரங்கு நடத்தவும் பயன்படும் சிறந்த நூல். ரூ. 1 25

பதிவு எண் : M. 4899

# கழகப் புதிய வெளியீடுகள்

**சிறுவர்க்கான திருவள்ளுவர் நாடகம்**
—என். கே. வேலன், பி.ஏ.

திருவள்ளுவரின் வரலாற்றைச் சிறுவர்கள் படித்துச் சுவைத்து நடித்து மகிழும் வண்ணம் இந்நாடகம் எழுதப் பட்டுள்ளது. உரையாடல்களின் ஊடே திருக்குறள் மேற்கோள்களும் தரப்பட்டுள்ளன. ரூ. 1 25

**ஒலியின் கதை**—இரா. கல்யாணசுந்தரம், பி.எசி.

ஒலி எப்படி உண்டாகிறது, எப்படிப் பரவுகிறது—ஒலித் திருப்பம், எதிரொலி என்பனவற்றின் விளக்கம், ஒலியின் வேகத்தைக் கணக்கிடு முறை—எதிரொலியால் கிடைக்கும் பலன்கள். வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி ஆகியன பற்றிய ஆராய்ச்சி இன்னபிற செய்திகளைப் பள்ளிச்சிறுரும் எளிதில் புரிந்து கொள்ளும்படி எழுதப்பட்டுள்ளது. விளக்கப் படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு. ரூ. 3 00

**சிறுவர்க்கான இராசராசன் கதை**—பூவண்ணன்

சேர சோழ பாண்டிய மன்னர்களுள் சோழ மன்னர்களின் வரலாறு குறிபபிடத் தக்க சிறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்டது. இதில் வரும் மூன்று இராசராசர்களின் வரலாறு சுவையானவை. சிறுவர்கட்கெனவே எழுதப்பட்டுள்ளது. படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு. ரூ. 2 50

**நமது உணவு**—T. V. சங்கரக்குமாரு

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு உணவு முறைகள் எப்படி அமைதல் வேண்டும் என்பதையும் உணவின் தன்மை —உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உணவுகள் உணவு வழங்கிடும் அரசின் பணிகள் ஆகிய பயனுள்ள செய்திகளைக் கூறுகிறது இந்நூல். ரூ. 2 50

**ஏற்றம் பெற இருபது நோக்கத் திட்டம்**
**(20 Points Programme)**
—மா. பா. குருசாமி, எம்.ஏ., டி.ஜி.டி

இப்போது நாடெங்கும் பேசப்பட்டு வரும் இருபது அம்சத் திட்டங்கள் யாவை? திரு. சஞ்சய் காந்தியின் 5 அம்சத் திட்டங்கள் யாவை? அவை எப்படியெப்படியெல்லாம் செயல் பட்டு வருகின்றன? என்பனவற்றை விளக்கும் அரிய நூல். ரூ. 6 75

**VALLUVAR KOTTAM**

This is a guide book in English for Valluvar Kottam. The historical background and glories of Tiruvalluvar and his Kural are given in this tiny booklet. The detailed descriptions of the structure, artistic value of the Kottam and of the mode of display of Tirukkural couplets in it are the note-worthy featuers of this booklet 60 N.P.